No:56:04 Price: Rs.10.00

# Herald of Deliverance
# விடுதலைத் தூதன்

"Speak evil of no man" -Titus3:2 " Follow peace with all men"-Hebrews12:14

APRIL 2012

## ஆண்டவரும் இரட்சகருமாகிய
## இயேசு கிறிஸ்துவின்
## பாடுகள்

## இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக (E-Books) இலவசமாக (மத்தேயு 10:8) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் (Download) செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: www.WordOfGod.in

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் (E-Book) வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய WhatsApp எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ (Email) எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

## *Wishing you in the mighty name of Jesus Christ*

*We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.*

*95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.*

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

# ஆசிரியர் உரை...

அன்பான தூதன் வாசகர்களே!

இயேசு கிறிஸ்துவின் இணையற்ற நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன்.

கிறிஸ்தவ உலகம் புனிதவெள்ளி, இயேசுவின் உயிர்த்தெழுதல் ஆகிய இந்நாட்களை அநுசரிக்க இம்மாதத்தை முக்கியப்படுத்தி, தேவனை ஆராதிப்பது இயல்பு. இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தினால் இரட்சிப்பைப்பெற்ற மக்களோ, எல்லா மாதங்களையும், எல்லா நாட்களையும் ஒன்றுபோல் கருதி இயேசுவை வழிபடுவர்.

புனிதவெள்ளி நாளை நாம் தியானிக்கையில் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தோடு இன்னும் கிட்டிச்சேர்ந்து, நம்மை ஐக்கியப்படுத்திக்கொள்ளுவோம். சிலுவையில் வெளிப்பட்ட அவரது அன்பு, தாழ்மை, பொறுமை, பாடுசகித்தல், கீழ்ப்படிதல், அன்புக்குரியவர்களைப் பிரிதல் போன்ற எல்லாப் பண்புகளிலும் அவரே நமக்கு முன்மாதிரி. ஆகவே, அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்ற, முனைந்து காணப் படுவோம் (1 பேதுரு 2:21).

"**ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், அவர் உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்**" (ரோமர் 6:5).

ஆம், வேதம் கூறுமாப்போல, நாம் அவரது மரணத்தின் சாயலில் இணைக்கப் பட்டிருப்போமாயின், அவரது உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டு, மாமிசத்தையும் அதின் ஆசைஇச்சைகளையும் மேற்கொண்டு வாழுவது அவசியமாகும். கிறிஸ்தவவாழ்வில் வெற்றிவாகை சூடி, சீக்கிரமாய் வரவிருக்கும் அவரது இரகசிய வருகைக்கு நம்மை ஆயத்தப்படுத்திக்கொள்ளுவோம்.

அடுத்து, ஏப்ரல் மாதம் கணக்காண்டின் முதல் மாதமாகும்.

"**... அவன் செய்வதெல்லாம் வாய்க்கும்**" (சங்கீதம்1:3).

"**உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய்; உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும்**" என்று வேதம் கூறுகின்றது.

ஆம், இம்மாதம் உங்களது பிரயாசங்களைக் கர்த்தர் கனப்படுத்தி, உங்களது தொழில்துறைத் திட்டங்கள் அனைத்தையும் வாய்க்கும்படி செய்வார்.

"**... விளையச்செய்கிற தேவனாலே எல்லாமாகும்**" என்றவர் உங்களது கிரியைகளனைத்தையும் கைகூடிவரப்பண்ணுவார். உங்களது கண்கள் தேவன்மேலேயே எப்போதும் பதிந்திருக்கட்டும்.

கடந்த மாதத்தில் விசுவாசிகளின் பிள்ளைகள் பலரது தேர்வுகள் முடிந்திருக்கும். எனினும், சில பிள்ளைகளின் வகுப்புகளுக்குரிய தேர்வுகள் இனிதான் நடக்கவிருக்கின்றன. தேர்வைச் சந்திக்கவிருக்கும் பிள்ளைகள் புறஜாதியினரைவிடப் பத்துமடங்குச் சமர்த்தராகக் காணப்பட (தானியேல் 1:20), நாம் விசுவாசத்தோடு ஜெபிப்போமாக. ஜெபத்தைக் கேட்கிறவர் அப்படியே செய்வார்.

கர்த்தர்தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

அன்புள்ள

R. K. Sam…

ஆண்டவரும் இரட்சகருமாகிய

# இயேசு கிறிஸ்துவின் பாடுகள்

போதகர் எம்.கே.சாம் சுந்தரம்

அவதாரங்கள் என உலகில் தோன்றினவர் ஒருவரும் மனுக்குலத்தின் பாவநிவாரணத்திற் கோர் வழிவகுத்ததில்லை. பரிசுத்த ஆவியான வரின் வல்லமையால் கன்னி மரியாளின் கர்ப்பத்தில் உருவாகி, இப்பூவுலகில் அவதரித்த இயேசுகிறிஸ்துமட்டுமே இதற்கோர் வழி வகுத்துள்ளார்.

சர்வலோக மக்களின் பாவங்களுக்கும் தம்மைப் பலிக்கடாவாய்ச் சிலுவை மரணத் திற்கு ஒப்புக்கொடுத்து, தமது இரத்தத்தைச் சிந்தினதின் வாயிலாக, மனுக்குலத்திற்கு ஒரு பாவநிவிர்த்தியை ஏற்படுத்தினார் இயேசு. அவரது சிலுவைப்பாடுகள், மனிதனுக்குப் பாவநிவிர்த்தியைக் கொடுப்பதுமட்டுமல்லாது, பரிசுத்தப்படுத்தி, அவரை விசுவாசிப்போரை அவரது வருகைக்கும் ஆயத்தஞ்செய்கின்றது.

*"உபத்திரவப்பட்டவனுடைய உபத்திர வத்தை அவர் அற்பமாயெண்ணாமலும் அருவருக்காமலும், தம்முடைய முகத்தை அவனுக்கு மறைக்காமலுமிருந்து, தம்மை நோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார்"* (சங்கீதம் 22:24).

இச்சங்கீதத்தின் 24ஆம் வசனம், நமது செய்திக்குத் திறவுகோலாய் அமைந்துள்ளது. தாவீதின் அனுபவங்களைச் சுட்டிக்காட்டும் இச்சங்கீதத்தின் வரிகள் அனைத்தும் இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணத்தைக் குறித்த தீர்க்கதரிசனங்களாக அமைந்துள்ளன. கிறிஸ்து வுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன் பிறந்த தாவீது, அவரைக்குறித்த தீர்க்கதரிசன உரைகளைச் சங்கீதமாகப் பாடியுள்ளது, ஆச்சரியமூட்டுவ தாகக் காணப்படுகின்றது.

மேற்காணும் தாவீதின் சங்கீதத்தில் இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக்குறித்த மூன்று அம்சங்கள் காணப்படுகின்றன. அவை: இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் உபத்திர வங்கள்; இரட்சகராகிய இயேசு பிதாவைநோக்கி வேண்டுவது; இரட்சகராகிய இயேசு கிறிஸ்து வுக்குப் பிதா அருளிய மறுமொழி என்பனவாகும்.

## இயேசுவின் உபத்திரவங்கள்

*"உபத்திரவப்பட்டவனுடைய உபத்திர வத்தை..."* (சங்கீதம் 22:24) என்றுள்ள முதலாம் குறிப்பில் ஐந்து உபதலைப்புகள் இடம் பெற்றுள்ளன. அவை: தம் பிதாவோடு கொண்டிருந்த உறவில் இயேசுகிறிஸ்துவுக்கு ஏற்பட்ட பிளவு, தாங்கொணா அவரது சிலுவைப்பாடுகள், சிலுவையிலே அவர் சந்தித்த அசௌகரியங்கள், சிலுவையில் தொங்கியபோது அவர் அநுபவித்த அவமரியாதை, அவர் அடைந்த அவமானம் என்பனவாகும்.

### அ. தம் பிதாவோடுகொண்டிருந்த உறவில் இயேசுவுக்கு ஏற்பட்ட பிளவு:-

*"என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்? எனக்கு உதவி செய்யா மலும், நான் கதறிச்சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்"* (சங்கீதம் 22:1)?

இச்சொற்கள் தாவீதின் அனுபவத்திற்கு ஏற்றாற்போல் அமைந்து காணப்படினும், இயேசு கிறிஸ்துவின் உபத்திரவங்களுக்குத் தான் மிகவும் பொருத்தமாய்க் காணப்படு

கின்றது. இயேசுகிறிஸ்து சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்தவேளையில் கூறின ஏழு வார்த்தைகளில் இது நான்காம் வார்த்தையாகும்.

*"... ஏலீ! ஏலீ! லாமா சபக்தானி,..."* (மத்தேயு 27:46), *"... எலோயீ! எலோயீ! லாமா சபக்தானி,..."* (மாற்கு 15:34) என்று கூறப்பட்ட இவ்வார்த்தைகளின் பொருள், *"...என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்..."* என்பதாகும்.

தாம் உயிர்நீக்கும்போது, இயேசுகிறிஸ்து கதறிக் கதறி, இவ்வார்த்தைகளைக் கூறினார் என்றுதான் உலகோர் எண்ணியிருப்பர். இது தவறு. இயேசுகிறிஸ்து தம் பிதாவைவிட்டு ஒருபோதும் பிரிந்து வாழ்ந்ததில்லை. ஏனெனில், அவர் எப்போதும் பிதாவின் சித்தத்தையே செய்துவந்தார்.

பிதாவாகிய தேவன் பாவத்தை வெறுத்தார், பாவிகளை நேசித்தார். இயேசுகிறிஸ்து, தமது வாழ்நாட்களின் முன்னரும், தாம் உலகில் வாழ்ந்த காலத்திலும், தமது வாழ்நாட்களின் பின்னர் வாழவிருக்கும் மக்களுக்காகவும், அதாவது, சர்வலோக மக்களின் பாவங்கள் அனைத்திற்காகவும், சிலுவையில் ஜீவபலியாகத் தம்மை அர்ப்பணித்த நேரம் அது. பாவத்தை வெறுத்த பிதா அப்போது தமது திருமுகத்தைத் தம் குமாரனாகிய இயேசுவுக்கு மறைத்தார். அவர், தம் குமாரனைக் கைவிடவில்லை. சர்வலோகத்தின் பாவம் இயேசுவின்மீது சுமத்தப்பட்டபடியால், பாவமறியாத அவருக்குப் பிதாவின் முகம் மறைக்கப்பட்டது. பிதாவுக்கும் இயேசுவுக்குமிடையே உள்ள உறவு அந்நேரம் துண்டிக்கப்பட்டது. *"... பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்"* (2 கொரி. 5:21) என்று வேதம் கூறுகிறது காண்க.

நமது மூளை அறிவால் இதனைக் கிரகித்துக்கொள்ளமுடியாது. அவர் பாவஞ் செய்யவில்லை; அவருடைய வாயில் வஞ்சனை காணப்படவுமில்லை. அவர் குற்றமற்றவ குற்றஞ்சாட்டப்படவும் முடியாதவர். த பிதாவோடுள்ள ஐக்கியத்தை, உறவை அ இழந்தபடியால்தான், *"ஏன் என்னை கைவிட்டீர்?"* என்று கதறினார்.

இதனை வாசித்துக்கொண்டிருக் நண்பரே! இதுவரை நீங்கள் இயேசுவா பாவமன்னிப்பைப் பெறாதிருப்பீர்களானா உங்கள் பாவங்களுக்காய் மரித்த இயேசுவி உங்களை அர்ப்பணியுங்கள்; பாவமன்னிப்பை பெற்றுக்கொள்ளுங்கள்.

**ஆ. அவரது சிலுவைப்பாடுகள்:-**

*"நானோ ஒரு புழு, மனுஷனல்ல மனுஷரால் நிந்திக்கப்பட்டும், ஜனங்களா அவமதிக்கப்பட்டும் இருக்கிறேன்.*

*"என்னைப் பார்க்கிறவர்களெல்லாரு என்னைப் பரியாசம்பண்ணி, உதட்டை பிதுக்கி, தலையைத் துலுக்கி:*

*"கர்த்தர்மேல் நம்பிக்கையாயிரு தானே, அவர் இவனை விடுவிக்கட்டும்; இவ மேல் பிரியமாயிருக்கிறாரே, இப்பொழு இவனை மீட்டுவிடட்டும் என்கிறார்கள்"* (சங்கீதம் 22:6,7,8).

சங்கீதம் 22:6 முதல் 8 வரையுள்ள வசனங்களின் கருத்தும், மத்தேயு 27:39 முதல் 44 வரையுள்ள வசனங்களின் கருத்தும் ஒன்று போலவே அமைந்துள்ளன.

சிலுவையில் கண்ட இயேசுவின் பகைஞர் தங்கள் உதட்டைப் பிதுக்கி, தலையைத் துலுக்கி, தேவன்மேல் நம்பிக்கையாயிருந்த இவனை, அவர் விடுவிக்கட்டும் என்று பரியாசம்பண்ணினார்கள். இயேசுகிறிஸ்து, ஒரு புழுவைப்போல மக்கள் முன்னர் காணப் பட்டார். பூச்சிக்கும் புழுவிற்கும் பல வேறுபாடு உண்டு. பூச்சியை அடித்தால், அது கொட்டும் அல்லது பறந்துவிடும். புழுவோ மிதிக்கப்பட

அடித்தாலும், ஒரு குச்சியால் குத்தப்பட்டாலும் ஒன்றும் செய்யாது தன்னைச் சுருட்டிக் கொள்ளும்.

இயேசுகிறிஸ்து சிலுவையில் தொங்கின போது, எதிரிகள் தங்கள் தலையைத் துலுக்கினார்கள், குறைகூறினார்கள். அவர் தம் பிதாவை நோக்கிக் கூப்பிட்டிருந்தால், பன்னிரண்டு லேகியோன்களுக்கு அதிகமான தூதர்களைப் பிதா அனுப்பியிருப்பார். அதாவது, எழுபத்திரண்டாயிரம் தூத்ர்கள் சேனைகளாக வந்து அவரை விடுவித்திருப்பர்.

ஒரு தூதன்மட்டுமே அசீரிய இராணுவத்தின் இலட்சத்து எண்பத்தையாயிரம் பேரைக் கொன்றுபோட்டான். 1,85.000 x 72 என்றால், எத்துணை எண்ணிக்கைக்கு அடங்கா தூதர்கள் இயேசுவுக்காகக் கிரியை செய்திருக்க முடியும்! அத்துணை வல்லமை பெற்றவர் ஒரு புழுவைப்போல ஏதும் செய்யாது, சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்தார். இரட்சகரின் துன்பங்களை வார்த்தைகளினால் விவரிக்க முடியாது. அத்துணை உபத்திரவங்களை இயேசுகிறிஸ்து சிலுவையில் சகித்தார்.

தேவபிள்ளைகள் அநேகரும் தங்களைப் புழுவென்று கூறி ஜெபிப்பர். ஆனால், மாய்மாலப் புழுவாக விளங்குவர். இயேசுவைப்போல, ஒரு புழுவாக மாறுவோமாக.

**இ. சிலுவையில் அவர் சந்தித்த அசௌகரியங்கள்:-**

*"அநேகம் காளைகள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பாசான் தேசத்துப் பலத்த எருதுகள் என்னை வளைந்துகொண்டது.*

*"நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது; பொல்லாதவர்களின் கூட்டம் என்னை வளைந்துகொண்டது; என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள்"* (சங்கீதம் 22:12,16).

*"பாசான் தேசத்துப் பலத்த எருதுகள்"* என்று இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளது காண்க. பாசான் தேசத்து எருதுகளைக்குறித்து ஆமோஸ் நான்காம் அதிகாரத்தில் காணலாம். அவ்விடத்தில் மாடுகளுக்கு நல்ல மேய்ச்சல் கிடைக்கும். ஆகவே, அவைகள் கொழுத்துக் காணப்படும். இஸ்ரவேலர் பாசான் தேசத்து எருதுகளுக்கு ஒப்பிடப்பட்டுள்ளனர். இயேசுகிறிஸ்து பிறந்தது யூதகுலமாகும். அவரது யூதகுல மக்களே அவரைச் சுற்றிலும் பாசான் தேசத்துக் காளைகளைப்போல வளைந்துகொண்டு, அவரைத் துன்புறுத்தினர்.

*"நாய்கள் என்னைச் சூழ்ந்திருக்கிறது;..."*

யூதர்கள், பாலஸ்தீன தேசத்தில் வாழ்ந்த யூதரல்லாத புறஜாதியினரை நாய்கள் என்று அழைப்பர். அவர்களை யூதர்கள் கொன்று வந்தனர். இயேசு கிறிஸ்துவையோ, யூதகுலத்தில் பிறந்தவர்களே சிலுவையில் அறையும்படி ஒப்புக்கொடுத்து, உபத்திரவப்படுத்தினர். அவர் இவ்வாறாகச் சிலுவையில் பல அசௌகரியங்களைச் சகிக்க நேரிட்டது.

**ஈ. அவர் அனுபவித்த அவமரியாதை:-**

*"தண்ணீரைப்போல ஊற்றுண்டேன்; என் எலும்புகளெல்லாம் கட்டுவிட்டது. என் இருதயம் மெழுகுபோலாகி, என் குடல்களின் நடுவே உருகிற்று.*

*"என் பெலன் ஓட்டைப்போல் காய்ந்தது; என் நாவு மேல்வாயோடே ஒட்டிக் கொண்டது; என்னை மரணத்தூளிலே போடுகிறீர்.*

*" ... என் கைகளையும் என் கால்களையும் உருவக் குத்தினார்கள்"* (சங்கீதம் 22:14,15,16).

இவ்வசனங்கள் அனைத்தும் இயேசுகிறிஸ்து அடைந்த நிந்தைகளைக் குறிப்பதாகும். அவரது எலும்புகள் கட்டுவிட்டதைக்

கண்டு யூதர்கள் மகிழ்ந்தனர். தண்ணீர் தாகத்தால் அவரது நாவு மேல்வாயோடே ஒட்டிக்கொண்டதால்தான் அவர், "... *தாகமாயிருக்கிறேன்*" (யோவான் 19:28) என்றார். சிலுவையிலே தொங்கியபோது, இயேசு கிறிஸ்து எழுத்தின்படியும் தாகமாயிருந்தார்தான். அவர் உள்ளுறுப்புகளெல்லாம் மெழுகுபோல் உருகி, அவரது பெலன் ஓட்டைப்போல் காய்ந்ததும் உண்மைதான். சிலுவையில் அவர் அடைந்த அவமானங்கள் அனைத்தையும் தாவீது தீர்க்கதரிசனமாக எழுதியுள்ளது குறிப்பிடத்தக்க ஆச்சரியமாக அமைந்துள்ளது.

**உ. சிலுவையில் அவர் அடைந்த அவமானம்:-**

*"என் எலும்புகளையெல்லாம் நான் எண்ணலாம்; அவர்கள் என்னை நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.*

*"என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின்பேரில் சீட்டுப் போடுகிறார்கள்"* (சங்கீதம் 22:17,18).

இங்கு, இயேசுகிறிஸ்து கடந்து சென்ற அவமானத்தைக் காண்கிறோம். ஒருவன் மரிக்கும்போது அவனுக்குச் சொந்தமாகக் கருதப்படுவது, அவனது உடலை மறைக்கும் உடைதான். இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கின நேரத்தில் அவரது உடலை மறைத்திருந்த துணிகூட இல்லை. அதனையும் அவரது பகைஞர் எடுத்துச் சீட்டுப்போட்டுப் பங்கிட்டு, தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொண்டனர். இதேகுறிப்பை, மத்தேயு 27:35 ஐ வாசித்து அறியலாம். இது எத்துணை அவமானம்!

சங்கீதம் 22:24 இல், "*உபத்திரவப் பட்டவனுடைய உபத்திரவத்தை...*" என்று காண்பது, மேற்கூறப்பட்ட ஐவகையான உபத்திரவங்களைச் சுட்டுகின்றது.

நாம் இவ்வுலகில் அனுபவித்துவரும் உபத்திரவங்களை இயேசு கிறிஸ்துவி[ன்] பாடுகளோடு ஒப்பிடுவோமானால், அ[வை] அனைத்தும் பூஜ்யமே. அவை ஒ[ரு] பொருட்டாகவும் எண்ணப்படமாட்டா. அ[வர்] பாடுகளின் உச்சக்கட்டத்தை அடைந்தார். நம[து] பாடுகளில் நாம் அவரைப்போலவே பொறுமை[] யாயிருக்க வேண்டும் என்னும் பாடத்தை அவரிடமிருந்து இன்று நாம் கற்று[க்] கொள்ளுவோம்.

## இரட்சகராகிய இயேசுகிறிஸ்துவின் வேண்டுதல்

சங்கீதம் 22: 2,19,11 ஆகிய வசனங்களை வாசித்தறியவும்.

இச்சங்கீதத்தின் 2 ஆம் வசனத்தில் இயேசு தம் பிதாவின் இரக்கம்வேண்[டி] ஜெபிப்பதைக் காணமுடிகிறது. 19 ஆம் வசனத்தில், சிலுவைப் பாதையில் தமக்கு வேண்டிய பெலத்துக்காக வேண்டுகிறார். 11 ஆம் வசனத்தில் தேவனுடைய பாதுகாப்பிற்காக அவர் விண்ணப்பிக்கிறதைக் காண்கிறோம்.

*"என் தேவனே, நான் பகலிலே கூப்பிடுகிறேன், உத்தரவுகொடீர்; இரவிலே கூப்பிடுகிறேன், எனக்கு அமைதலில்லை"* (சங்கீதம் 22:2).

இந்த வசனத்தின் விரிவாக்க மொழி பெயர்ப்பு, "*எனக்கு அமைதலில்லை, நான் தவித்தேன், துடித்தேன்*" என்னும் பொருள்படுமாறு கூறுகிறது. ஒரு கோணத்தில் இயேசுவை நோக்குவோமாயின் அவர் தேவகுமாரன்; மற்றொரு கோணத்தில் அவர் மனுஷகுமாரன்தான். தேவகுமாரனாக அற்புதங்களைச் செய்தார்; மனுஷகுமாரனாக நம்மைப் போன்று பாடுகளின் வழியேசென்றார். தம் வாழ்க்கையில் சகல காரியங்களிலும் அவர் நம்மைப்போலவே பரீட்சிக்கப்பட்டார்.

*"... என் பிதாவே, இந்தப் பாத்திர[ம்]*

*ன்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்;...''* (மத்தேயு 26:39) என்று அவர் பிதாவை நோக்கி ஜெபித்தது, ஓர் உயர் அதிகாரியிடம் தாம் கொடுத்த மனுவைப் போன்று காணப்படுகின்றது. ஆம், மனிதனாக வாழ்ந்த அவர் சிலுவைப்பாடுகள் நீங்கப்பெற, தம் பிதாவிடம் வேண்டுகோள் விடுத்தார். ஆகவேதான் இக்குறிப்பை, "இரட்சகரின் வேண்டுகோள்" என அழைப்பது சாலவும் ஏற்புடையது.

*''ஆனாலும் கர்த்தாவே, நீர் எனக்குத் தூரமாகாதேயும்; என் பெலனே, எனக்குச் சகாயம்பண்ணத் தீவிரித்துக்கொள்ளும்''* (சங்கீதம் 22:19).

இயேசுகிறிஸ்து தமது சிலுவைப் பாதையில் தமக்குப் பெலன்வேண்டும் என, பிதாவிடம் ஒரு மனுஷனைப்போல வேண்டுகோள் விடுத்தார். அவர் எழுத்தின்படி கைவிடப்பட்ட நிலையில் இல்லைதான். எனினும் ஒரு மனுஷனாக இவ்வுலகில் வாழ்ந்ததால், தம் பிதாவிடம் பெலன் வேண்டி ஜெபித்தார். அப்போது பிதா தமது தூதனை அனுப்பி இயேசுவைப் பெலப்படுத்தினார் (லூக்கா 22:43). இரட்சகரின் வேண்டுகோள் கேட்கப்பட்டது.

அன்பானவர்களே! இரட்சகர் இயேசு வேண்டுகோள் விடுத்தபோது இரங்கின பிதாவாகிய தேவன், உங்களது பாடுகளின் நேரத்திலும் உங்களுக்கு இரங்கி பதிலளிப்பார்.

*''என்னைவிட்டுத் தூரமாகாதேயும்; ஆபத்து கிட்டியிருக்கிறது, சகாயரும் இல்லை''* (சங்கீதம் 22:11).

தமது பாதுகாப்புக்காகப் பிதாவிடம் இயேசுகிறிஸ்து வேண்டுவதை இங்குக் காண்கிறோம். கெத்செமனே தோட்டத்தில் பிரதான ஆசாரியரின் வேலைக்காரர் அவரைப் பிடித்துச்செல்ல வந்தபோது, அவருடன் இருந்த சீஷர்கள் பயந்து, அவரைத் தனியேவிடுத்து, ஓடிச் சென்றுவிட்டனர். அப்போது அவருக்கு ஆபத்து கிட்டியிருந்தது. சகாயர் யாரும் உடனில்லை. அவருக்குப் பாதுகாப்புத் தேவையாயிருந்தது. இச்சூழ்நிலையையும் சங்கீதக்காரனான தாவீது தீர்க்கதரிசனமாக உரைத்துள்ளது வியக்கத்தக்கதாயுள்ளது.

*''இதோ, நீங்கள் சிதறுண்டு, அவனவன் தன்தன் இடத்துக்குப் போய், என்னைத் தனியே விட்டுவிடுங்காலம் வரும்; அது இப்பொழுது வந்திருக்கிறது; ஆனாலும் நான் தனித்திரேன், பிதா என்னுடனேகூட இருக்கிறார்''* (யோவான் 16:32) என்றார் இயேசு.

*''... பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை என்றார்''* (யோவான் 8:29).

பிரியமானவர்களே! இயேசு கிறிஸ்துவின் சிலுவைப்பாடுகளைத் தியானிக்கும் இந்நாளிலே தானே, நீங்களும் பிதாவுக்குப் பிரியமானதைச் செய்யுங்கள். "நான் தனித்திருப்பதில்லை, எந்தச் சூழ்நிலையிலும் தேவன் என்னோடு கூடவே இருக்கிறார்" என்றும் கூறுங்கள். பரமபிதாவை நோக்கி நீங்கள் வேண்டுதல் செய்யும்போது, அவர் தமது இரக்கத்தை உங்கள்மீது அருள்மாரியாய்ப் பொழிந்தருளுவார். உங்கள் சரீரத்தையும் ஆத்துமாவையும் பெலப்படுத்துவார். தமது பிரசன்னத்தை உங்கள்மீது பிரகாசிக்கச் செய்து, உங்களுக்குப் பாதுகாப்பும் அருளுவார்.

## இரட்சகராகிய இயேசுவின் வேண்டுகோளுக்குப் பிதாவாகிய தேவன் அருளிய மறுமொழி

*''... தம்மைநோக்கி அவன் கூப்பிடுகையில் அவனைக் கேட்டருளினார்''* (சங்கீதம் 22:24).

இரட்சகராகிய இயேசுவின் வேண்டுகோளுக்குப் பிதாவாகிய தேவன் மறுமொழி அருளினதை, மேற்காணும் வசனம் தெளிவிக்

கின்றது. ஆம், நம் பிதாவாகிய தேவன் ஜெபத்தைக் கேட்கிற தேவன் மட்டுமல்லாது, ஜெபத்திற்குப் பதிலளிக்கிறவருமாவார்.

பிதாவாகிய தேவன் தந்த பதில்தான் என்ன? இச்சங்கீதத்தின் 30 ஆம் வசனத்தை நன்குப் புரிந்து வாசிப்பீர்களாக. அவ்வசனத்தை ஆழ்ந்து தியானிப்பீர்களாக.

*"ஒரு சந்ததி அவரைச்சேவிக்கும்; தலைமுலை தலைமுறையாக அது ஆண்டவருடைய சந்ததி என்னப்படும்"* (சங்கீதம் 22:30).

இயேசுவை ஆண்டவராய் ஏற்றுச் சேவிக்கும் ஒரு சந்ததி, உலகமனைத்திலும் உண்டாயிருக்கும் என்னும் பதிலை, பிதா அவருக்கு அருளினார்.

நீங்கள்தான் அந்தச் சந்ததி. ஏற்கனவே வாழ்ந்து தங்களது ஓட்டத்தை ஓடி முடித்திருக்கிறது ஒரு சந்ததி. இப்போது உலகில் அவரது பாடுகளின் எதிரொலியாய் வாழ்ந்துகொண்டிருக்கிறது மற்றுமொரு சந்ததி. இனி, வரவிருக்கும் காலத்தில் அவருக்காக உருவாகவிருக்கும் வேறோர் சந்ததியுமுண்டு. அவரது சந்ததி முக்காலத்திலும் அமைந்து காணப்படுகின்றது.

*"... நீதிமான்களுடைய சந்ததியோ விடுவிக்கப்படும்"* (நீதிமொழிகள் 11:21).

*"நீங்களோ,... தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததி ..."* (1பேதுரு 2:9).

'சந்ததி' என்ற சொல்லை இங்குக் காணவும். ஆம், பாவிகளாய் வாழ்ந்த உங்களைக் கர்த்தர் தெரிந்துகொண்டிருக்கிறார். நீங்கள் தனித்தன்மை வாய்ந்த சந்ததி, வினோதமான சந்ததி, நீங்கள் ஒரு பரிசுத்த ஜாதியாய் காணப்படும் சந்ததி. ஏன் உங்களைக் கர்த்தர் தனித்தன்மை வாய்ந்த சந்ததியாய் தெரிந்துகொண்டிருக்கிறார்? ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு உங்களை வரவழைத்தவருடைய புண்ணியங்களை உலகத்தாருக்கு அறிவிப்பதற்காக, உங்களைத் தெரிந்துகொண்டிருக்கிறார்.

*"அவர்கள் வந்து: அவரே இவைகளைச் செய்தார் என்று பிறக்கப்போகிற ஜனங்களுக்கு அவருடைய நீதியை அறிவிப்பார்கள்"* (சங்கீதம் 22:31).

அந்தகாரத்திலிருந்து ஆச்சரியமான ஒளிக்கு அழைத்துக் கொண்டுவந்தவரின் புண்ணியங்களை உங்களுடைய இளைய தலைமுறைகளுக்கு நீங்கள்தான் அறிவிக்க வேண்டும். தம்முடைய குமாரனுடைய வேண்டுகோளுக்குப் பிதாவானவர் அளித்த பதிலானது, உங்களுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு கட்டளையாகும். அதனை நிறைவேற்றுங்கள்.

நீங்கள் உங்களது குடும்பத்தாருக்கும், உங்களது சுற்று வட்டத்தாருக்கும், உங்களது கிராமத்தாருக்கும், உங்களது பட்டணத்திலுள்ளவர்களுக்கும், உங்களது தேசத்தாருக்கும், இயேசு கிறிஸ்து சிலுவையில் சிந்தின இரத்தத்தின் நோக்கத்தைப் பிரஸ்தாபப்படுத்தி, அவர்களை இரட்சித்து, ஆண்டவரைச் சேவிக்கும் சந்ததியராய் மாற்றுங்கள். உலகளாவிய மக்களிடம் அவரது சந்ததியை உருவாக்குங்கள். இதுவே, இப்புனித வெள்ளியில் இயேசுவுக்கு நீங்கள் செய்யும் அரும்பெரும் சேவையாகும்.

நீங்கள் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறட்டும்.

**கை தலை காலிலும் இதோ**
**பேரன்பும் துன்பும் கலந்தே**
**பாய்ந்தோடும் காட்சிபோல் உண்டோ**
**முட்கிரீடமும் ஒப்பற்றதே.**

– வாட்ஸ்

# The resurrected Saviour *blesses His people*

Pastor M.K. Sam Sundaram

We worship not a dead Lord, but the risen Saviour. It is true He died on a cross, and was buried. But, the fact that He lives in our hearts is proof enough that He rose from the dead and is alive even today.

Here are some more infallible proofs that Jesus Christ is alive. After His resurrection He showed Himself alive by His personal appearance to Mary Magdalene and His disciples who were very close to Him while He was on His mission on the earth.

We read in John 20:18, 25 and 29 about Jesus showing Himself alive to the people mentioned above.

*"Mary Magdalene came and told the disciples that she had seen the Lord"* (John 20:18),

*"The other disciples therefore said unto him, We have seen the Lord"* (v.25).

*"Jesus saith unto him, Thomas, because thou hast seen me, thou hast believed: blessed are they that have not seen, and yet have believed"* (v.29).

Nothing happens in the kingdom of God without a purpose. What is the purpose of God the Father in resurrecting His Son Jesus Christ from the grave? The purpose, as we understand from the Word of God, is to bless His people. There are three specific blessings which the resurrected Saviour gives to His people, and they are as follows:

1. The resurrected Saviour calls us by name when we are disappointed.

2. He sets us free from fear.

3. He convinces us of the truth of His resurrection.

**The resurrected Saviour calls us by name when we are disappointed**

John 20:18 tells us that Mary Magdalene went to the disciples after meeting Jesus face to face, and told them that she had seen the Lord. She also conveyed to them the things He had spoken to her.

Mary Magdalene who visited the tomb early in the morning on the first day of the week was disappointed to find the stone at the mouth of the tomb rolled away. She ran to Peter and John and told them about it. She concluded that someone must have taken the Lord away from the tomb and laid Him elsewhere.

Both the disciples ran to the tomb and found it empty except for the linen wrappings kept there. They went back, but Mary Magdalene stood there determined to know what had happened to Jesus' body buried there. Filled with disappointment, she began to weep. Then she peered into the tomb, and saw two angels in white sitting there. They asked her why she was weeping. As she was

speaking to them, she turned round and saw Jesus standing there, but she did not recognize Him.

Jesus asked her why she was weeping and who she was looking for. Mistaking Jesus for a gardener she asked Him if he had removed the bodyof Jesus from there, and if so, where he had laid Him so that she could take Him away (John 20:15). Then Jesus said, *"Mary."* At once she recognized Him and said, *"Rabboni"* ('Master' or 'Teacher' in Hebrew). When Jesus said to her, "Woman" (v.15), she thought He was a gardener, but when He called her by name, she knew it was Jesus.

Jesus knows every one of us by name. He also sees our tears. It is comforting to know that the resurrected Saviour calls each one of us by name, especially when we are disappointed and dejected in life.

Dear child of God, even now as you are reading this message, you may be weeping because you have lost someone very dear to you or you have met with great disappointment. Do not weep. Jesus the resurrected Saviour stands by your side, sees your tears, calls you by name and speaks such words of comfort and consolation that you weep no more. The tenderness with which He calls you by name will drive away all your disappointment and depression. Though you may not see Him, you will certainly feel His reassuring presence very close to you.

*"She supposing him to be the gardener..."* (v.15).

In this portion of the verse we see Mary's misconception. She thought it was the gardener who was speaking to her. She came expecting to see only the corpse of Jesus, and she could hardly imagine Him to be alive. Jesus is omniscient. He knows everyone's thoughts, and He knew Mary's as well.

On another occasion also Jesus was mistaken for something He was not. He, the Son of God, was thought to be a spirit! In Mark 6:45-50 we read about an incident. After Jesus fed the 5000 with five loaves and two fish, He made His disciples embark and cross to Bethsaida while He went up a mountain to pray. The boat had already sailed far in the lake, and the disciples were struggling to row against a strong wind. Jesus went towards them walking on the water. He was going to pass them by, and the disciples cried out thinking He was a spirit. But, Jesus said *"It is I: be not afraid."*

You need to know Jesus as the resurrected Saviour and Friend and not as a gardener or a ghost. He is the Master who controls all situations in life, and He will turn up when you are disappointed, and call you by name to show His love for you.

Mary Magdalene was excited to see Jesus alive, and she was going to touch Him with all affection and reverence. Jesus knew Mary's desire to touch Him, but He did not let her, and said that He had not yet ascended to His Father.

Mary Magdalene knew the value of touching Jesus. If you touch even the hem of His garment, supernatural power will be

...fested. Matthew 14:36 says, *"And be-... him that they might only touch the ... of his garment: and as many as ... were made perfectly whole."*

Jesus is alive today, and He is in your ... waiting to give His love and concern ... you are dejected because of some dis-...ointment you have met with.

**He sets us free from fear**

*"Then the same day at evening, be-... the first day of the week, when the doors ... shut where the disciples were as-...sembled for fear of the Jews, came Jesus ... stood in the midst, and saith unto them, ... be unto you"* (John 20:19).

This incident happened on the evening of the same day He appeared to Mary ...lene. The disciples were so afraid of ... that they were behind locked doors. ... entered the room and said, *"Peace be ...you."*

The first thing that strikes us as we ... 19-23 is that the disciples were filled ... great fear. They were afraid of the Jews who had crucified Jesus only two days be-...fore and they were not sure what evil would ... them who were His disciples. The ...ked doors speak of their well-founded ...

We know how when Apostle Paul was ...aching the gospel with great fervour, the ... were waiting to get hold of him and kill ... The Jews were against Jesus and His followers. Their animosity towards the dis-...ciples and other followers of Jesus was so much that wherever they found them, they were out to kill them.

Jesus entered through the locked doors and pronounced peace to His disciples. It was peace they were badly in need of in that hour. As He said, *"Peace be unto you"*, He was like a fortress to them, especially when they had lost all hope of seeing Him again. Their joy knew no bounds when the risen Lord appeared to them in flesh and bones (John 24:39).

When someone is within a fortress, he is safe from the attacks of the enemy. Now that Jesus had shown Himself alive, they were free from fear and were strengthened in their spirit.

Dear believer, if you are spending very anxious moments dreading your future, or if you live in constant fear of someone or something, remember that Jesus is alive for ever. He is your Fortress, and you can run to Him for refuge.

It is recorded in John 20:22 that Jesus breathed on His disciples and said, *"Receive ye the Holy Ghost."* By giving them the Holy Spirit, He gave them the freedom to go out and preach the gospel. He did not wish them to be confined in a room, but wanted them to go out and proclaim the good news that He is alive for evermore.

As a living Saviour He sets people free from the slavery of sin, and when they receive the Holy Spirit, they enjoy freedom from every kind of bondage. The Word of God says, *"... where the Spirit of the Lord is there is liberty"* (II Cor.3:17).

## He convinces us of the truth of His resurrection

(Please read John 20:25-28)

Thomas, one of the disciples of Jesus, was not with the others when Jesus appeared to them on the evening of His resurrection. When the other disciples told him that they had seen the Lord, he refused to believe them. He was stubborn in his refusal, for he needed proof. He said, *"Except I shall see in his hands the print of the nails, and put my finger into the print of the nails, and thrust my hand into his side, I will not believe."*

Jesus is omniscient. He knows even our thoughts which become utterances once they are verbally expressed. He knew what exactly Thomas had said to those who told him that they had seen the risen Lord.

After eight days, when Thomas was with the others, Jesus entered the room through the closed doors again, and pronounced peace to them. Then He told Thomas to reach out his finger and see His hands; reach his hand and put it into His side. Thus, Jesus repeated the words spoken by Thomas. He also told him not to be sceptical any longer but believe (the truth).

Verse 28 tells us about Thomas' submission to the risen Lord. The moment Jesus finished speaking to him, he said, *"My Lord and my God."*

This is the first time Jesus is addressed as God in the New Testament. Jesus has always been called, "Lord", but now, Thomas addressed Him as, *"Lord and God"*, and submitted himself to the all powerful and supreme God Jesus the resurrected Saviour.

It was Thomas who first addressed Jesus as God. Later, Apostle Paul and Apostle John referred to Him as God. Jesus Christ is God over all blessed (Rom.9:5), He is great God (Titus 2:13), and the true God (John 5:20).

Thomas came to India and died a martyr in Madras (now called Chennai). While he was praying in Little Mount, he was stabbed in the back by some religious fanatics. Bleeding, he crawled to St. Thomas Mount (the place that is named after him) and died there holding on to a small cross. He was buried in Santhome in a church he himself had built. We should thank God for Thomas because he evangelized our country.

The resurrected Saviour calls you by name when you are disappointed, sets you free from fear, and convinces you of the truth of His resurrection when you have any doubt about it.

Accept Him as your Lord and Saviour, for it is He who died for your sins, was buried, and rose again to be alive for ever.

> **Fear not, I am with thee—O be not dismayed,**
> **For I am thy God, I will still give thee aid;**
> **I'll strengthen thee, help thee, and cause thee to stand,**
> **Upheld by My gracious, omnipotent hand.**
>
> - Anon

விசுவாச அப்போஸ்தலின்

# ஸ்மித் விக்கிள்ஸ்வொர்த்

ஊழியர் பகுதி

**...பெரும் ஊழியத்துக்கு ஆயத்தம்**

சில ஆண்டுகளுக்குள் விக்கிள்ஸ்வொர்த், ...க்கையில் ஏதோவொரு வெறுமையை ...தார். தேவனிடமிருந்து பெற்றுக் ... வேண்டியது இன்னும் இருக்கிறது ...ணர்வு அவரை அரித்துக்கொண்டே ...து. பரிசுத்தம் என்பது மிக முக்கிய ... ஆனால், அதே சமயம் வல்லமை ... தேவன் தந்த வாக்குத்தத்தமல்லவா? ... தம்முடைய சீஷர்களை விட்டுப் ...லத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் "*...பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும் ...ீங்கள் பெலனடைந்து,...*" (அப். 1:8) கூறிய வாக்குத்தத்தம் அவரது ...தில் ஓயாமல் ஒலித்துக்கொண்டே ...து.

இந்தக் காலக்கட்டத்தில்தான் அதை ...பூர்வமாக அறிந்துகொள்ளும் வாய்ப்பும் ...குக் கிட்டியது. சந்தர்லாந்து நகரிலுள்ள ...பரிசுத்தவான்களின் ஆலயத்திலே' ...குப் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் ...திருக்கிறது என்ற செய்தி அவரை ...து. அந்தநாள் வரை தான் ஏற்கனவே ... ஆவியால் அபிஷேகம் பண்ணப்பட்டு ...ாகவே அவர் நம்பி வந்தார். பரிசுத்த ...படுதலின் நாளே ஆவியானவரின் ...ஷகம் பெற்ற நாள் என்று அக்காலக் ...தில் மக்கள் நம்பி வந்தனர். விக்கிள்ஸ் ...த்தும் அவரது துணைவியாரும் இதே ...கையுடையவர்களாகத்தான் இருந்தனர். ... அந்தப் பத்து நாட்கள் உபவாசத்துக்குப் ... அவருடைய சுபாவமும் முற்றும் ...விட்டிருந்தது. எனவே, தான் பரிசுத்த ...பட்டுவிட்டதாகவும், ஆவியின் அபிஷேகம் ...விட்டதாகவும் அவர் எண்ணினார்.

இந்த மனோநிலையில் அவர் சந்தர்லாந்து சென்றார். அங்கு ஆராதனையைத் தலைமையேற்று நடத்திவந்தவர் போதகர் அலெக்சாந்தர் பாடி. விக்கிள்ஸ்வொர்த் அவரது கூட்டங்களில் கலந்துகொண்டார். தமது பிராட்ஃபோர்டு நகரக் கூட்டங்களிலே அக்கினி பற்றியெரிவதாகத் தோன்றும் அவருக்கு. ஆனால் இங்கோ அவருக்கு ஒன்றுமே புரியவில்லை. தான் எதிர்பார்த்து வந்த அந்நிய பாஷை போன்ற எந்தவிதமான வெளிப்பாடு களும் தோன்றவில்லையே என ஏமாற்றத்தில் வருந்தினார். கூட்டத்திலேயே வாதம்பண்ணத் தொடங்கிவிட்டார் விக்கிள்ஸ்வொர்த். "நான் பிராட்ஃபோர்டிலிருந்து இதற்காகத்தான் வந்திருக்கிறேன். அந்த முதல் பெந்தெகொஸ்தே நாளன்று சீஷர்கள் அந்நியபாஷையில் பேசியதைப் போலவே நானும் பேசவேண்டும். ஆனால் இங்கே ஒன்றுமே இல்லையே!"

"நீங்கள் ஆவியின் அபிஷேகத்தைப் பெறும்போது அந்நிய பாஷையில் பேசுவீர்கள்"—இது அவர்கள்.

"ஓ, இது அவ்வளவுதானா? தேவ பிரசன்னம் என்மீது இறங்கியபோது என் நாவு கட்டவிழ்க்கப்பட்டது. நான் திறந்தவெளியிலே பிரசங்கம் பண்ணப்போனபோது, எனக்கு ஒரு புதுநாவு கிடைத்தது."

"இல்லை, அது அந்நிய பாஷை இல்லை"—இது அவர்கள்.

"அப்படியானால் என்ன அது?"

"உங்களுக்கு ஆவியானவரின் அபிஷேகம் கிடைக்கும்போது விளங்கும்"— இது அவர்கள்.

"நான் அபிஷேகம் பெற்றவன். அதை

இல்லையென்று சொல்ல இங்கு ஒருவராலும் கூடாது"—முழக்கமிட்டார் விக்கிள்ஸ்வொர்த்.

இவ்வாறு வாதம்பிரதிவாதம் தொடர்ந்து கொண்டேயிருந்தது. கூட்டம் முடிந்து, அவர் ஊருக்குத் திரும்பும் கடைசி நாளும் வந்தது. அவரால் அமைதியாயிருக்க முடியவில்லை. நேராகப் போதகர் வீடு சென்றார். அங்கு அவரது லைப்ரரி அறையில் அமர்ந்தவாறே, போதகரின் மனைவியை நோக்கி, "என்னால் அமைதியாய் இருக்கமுடியவில்லை. இந்த அந்நியபாஷை எனக்கு வேண்டும்."

"அந்நியபாஷை அல்ல, உங்களுக்கு வேண்டியது ஆவியின் அபிஷேகம்தான். அபிஷேகிக்கும்படி தேவனை நீங்கள் அனுமதித்தால் எல்லாமே கிடைத்துவிடும்"—அந்த அம்மையார் பதிலளித்தார்.

"அருமை சகோதரியே, நான் அபிஷேகிக்கப்பட்டுவிட்டேன் என எனக்குத் தெரியும். நான் விரைவில் ஊர்திரும்ப வேண்டும். எனக்கு அந்நியபாஷைதான் வேண்டும். உங்கள் கைகளை என் மீது வையுங்கள்."

அந்த அம்மையார் எழுந்து தன் கைகளை அவர்மீது வைத்தார்கள். அவ்வளவுதான்! அக்கினி இறங்கியது, அதே வினாடி, யாரோ கதவைத் தட்டியதால் அந்த அம்மையார் வெளியே சென்றார்கள். விக்கிள்ஸ்வொர்த் தேவனோடு தனியே இருந்தார். அப்போதுதான் இரண்டாம் முறையாக இயேசுவைத் தரிசித்தார் அவர். தேவ வல்லமையிலும், மகிமையிலும் நிரப்பப்பட்ட அவர் கண்டது—'ஓர் காலியான சிலுவை, அருகே பிதாவின் வலதுபாரிசத்தில் பூரண மகிமையோடு உயர்த்தப்பட்டவராய் நிற்கும் இயேசு.'

"இந்தக் காட்சியை நான் கண்டதும், தேவன் என்னைச் சுத்திகரித்துவிட்டதாக உணர்ந்தேன். ஒரு புதிய தரிசனம் பெற்றேன். எனக்குள் இருந்த ஓர் பரிபூரண ஜீவன் தம் வாயைத்திறந்து, 'சுத்தம், சுத்தம், பரிசுத்தம்' என்று கூறுவதை உணர்ந்தேன் நான் அவ சொல்லைச் சொல்ல, நான் அந்நிய பாஷையை பேசிக்கொண்டிருப்பதை உணர்ந்தேன் அடக்கவொண்ணா ஆனந்தம். என் சொ பாஷையில் விவரிக்கவியலா அதிச ஆவியானவர் தமது வார்த்தைகளைத் தந் நான் அந்நியபாஷைகளிலே தேவ ஆராதித்தேன். அது அத்துணை அ அத்துணை சமாதானம். அந்த ஆனந்த சமாதானமும் நான் அதுவரை அறியாத இப்போது எனக்குக் கிடைத்தது எது? அது வேதாகமச் சான்று!" இதுவே விக்கிள்ஸ்வொ அவர்களின் வாய்மொழிக் கூற்று.

திட்டமிட்டபடி, நேராக ஊருக்கு திரும்பவில்லை அவர். போதகர் அலெக்சா பாடி ஆராதனை நடத்திக் கொண்டிரு ஆலயத்துக்குச் சென்றார். ஆராதனை நட கொண்டிருந்தது; ஆராதனையில் குறுக்கி விக்கிள்ஸ்வொர்த், இரண்டொரு வார்த்தை பேச அனுமதிகேட்டார். அவர் தம்மு 'குறுக்கீட்டுப் பிரசங்கத்தை' முடித்தபோ சபையிலிருந்த ஐம்பது பேர் ஆவியானவரா அபிஷேகம் பண்ணப்பட்டு, அந்நியபாஷை பேசிக்கொண்டிருந்தனர். அந்த ஊரின் தின செய்தித்தாளான, 'சந்தர்லாந்து தின எதிரொலி' விக்கிள்ஸ்வொர்த்தின் இந் அனுபவத்தைத் தலைப்புச் செய்தியா வெளியிட்டது. மேலும், அன்று நிகழ்ந் அந்நியபாஷை, அற்புத சுகம் ஆகியவைகளை குறித்து நுணுக்கமான விபரங்களையு வெளியிட்டது. தமக்கு நேர்ந்ததைத் த குடும்பத்துக்குத் தந்தி மூலம் அறிவித்தா விக்கிள்ஸ்வொர்த்.

சொந்த ஊர் திரும்பிய விக்கிள்ஸ்வொ சந்திக்கவேண்டிய சவால் ஒன்று உடனடியாக காத்திருந்தது அவருக்கு. அவரது புதி அநுபவம்பற்றி அவரது மனைவிக்கு வித்திய மானதொரு கருத்து இருந்தது. அது உடனே வெளிப்பட்டுவிட்டது. அவர் வீட்டினு நுழைந்ததும், பாலி திட்டவட்டமாக அவரிட அறிவித்தாள். "நானும் உங்களைப்போலவே

பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்றவள் தான். ஆனால் அந்நியபாஷையில் பேசுவ தில்லை. இந்த ஞாயிறு நீங்கள்தான் பிரசங்கிக்கப்போகிறீர்கள். அதில் என்னதான் வித்தியாசம் இருக்கிறது என்று நான் பார்க்கத் தான் போகிறேன்.” சொன்னதைச் சொன்னபடிச் செய்துவிட்டாள் பாலி. ஞாயிறு ஆராதனையின் பொழுது ஆலயத்தின் கடைசி வரிசையில் சென்று அமர்ந்துகொண்டாள் பாலி. இப்போது பிரசங்கிக்க எழுந்து செல்வது விக்கிள்ஸ்வொர்த். அவர் பிரசங்கப்பீடம் நோக்கி நடந்து செல்லச் செல்ல, தேவன் தமது வசனங்களை (ஏசாயா 61:1-3) அவருக்குத் தந்தார். இந்த வசனங் களை மிகுந்த வல்லமையோடும், உறுதியோடும் பிரசங்கித்தார் அவர். திகைத்துப்போன [illegible]டமிருந்து வெளிப்பட்டன சொற்கள். “இந்த மனுஷனுக்கு என்ன ஆயிற்று? என் கணவர்தானா இவர்?”

ஆராதனை முடிந்ததும், தனக்கும் அவர் பெற்ற அதே அநுபவம் வேண்டும் எனக்கூறி எழுந்தார் ஒருவர். எழுந்த அவரால் உட்கார முடியவில்லை. தரையில் அப்படியே விழுந்தார். விக்கிள்ஸ்வொர்த்தின் மூத்தக் குமாரனும் அதே வார்த்தைகளைச் சொல்லிய வண்ணம் எழுந்தார். அவரும் அவ்வாறே விழுந்தார். சிறிது நேரத்திலே பதினொரு பேர் அவ்வாறு ஆவியில் நிரம்பினவர்களாய் விழுந்தனர். சபையினர் அனைவர் மேலும் ஆவியானவரின் மாரி பொழிந்தருளப்படு வதற்கு இதுவே ஆரம்பம். இதன்பின் நூற்றுக்கணக்கானபேர் ஆவியின் அபிஷேகம் பெற்றனர். அந்நிய பாஷைகளில் பேசி தேவனைத் துதித்தனர்.

விரைவில் பாலி அம்மையாரும் இதே அநுபவத்தைப் பெற்றார். ஆனாலும், அந்நிய பாஷையின் அநுபவத்தை விட, மேலானதோர் காரியம் ஒன்று ஆவியானவரின் அபிஷேகத்தில் உண்டு என்பதைக் கணவன், மனைவி இருவரும் உணர்ந்தனர். அந்நியபாஷை என்பது ஆவியானவரின் அந்தரங்கமான ஜெப பாஷைதான். ஆனால் இயேசு, “பெலனடை வீர்கள்” (வல்லமை பெறுவீர்கள்) என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் அல்லவா? ஆம், விக்கிள்ஸ்வொர்த் தனது சாட்சியின்போது, அப்போஸ்தலர்களைப் போலவே தானும் அபிஷேகம் பெற்றுவிட்டதாகக் கூறியபோது, “அவர்களிடம் உள்ளது உங்களிடம் இருந்தால் அவர்கள் செய்ததை நீங்களும் செய்ய முடியுமே!” என்று பாலி மறுமொழி அளித்தார்.

இதன் விளைவாக விக்கிள்ஸ்வொர்த்தும், “ஆண்டவரே, நீர் எதற்காக எனக்கு இந்த அபிஷேகத்தைக் கொடுத்தீர் எனக்காண்பியும்” என ஜெபிக்க ஆரம்பித்தார். தேவன் அதைக் காண்பிக்கும் நாளும் வந்தது.

விக்கிள்ஸ்வொர்த் இன்னும் தமது குழாய் செப்பனிடும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டுக்கொண்டுதான் வந்தார். அப்படி ஒருநாள் தன் பணி முடிந்து வீடு திரும்பினார் அவர். அங்கே அவரைச் சந்திக்கும்படியாக ஒரு முதியவரைக் கொண்டுவந்திருந்தனர். மன்னிக்கவே முடியாத ஒரு குற்றத்தைத் தான் செய்துவிட்டதாகக் கதறிக்கொண்டிருந்தார் அந்த முதியவர்.

“இதற்காகத்தான் நான் உன்னை அபிஷேகித்தேன்”—உடனடியாக தேவனுடைய குரல் ஓங்கி ஒலித்தது அவரது இதயத்தில். ஆவியிலே பலங்கொண்டார் அவர். “ஐயோ, நான் இழந்துபோய்விட்டேன், இழந்துபோய் விட்டேன், மன்னிக்கவே முடியாத பாவத்தைச் செய்துவிட்டேன்” என்று கதறிக்கொண்டிருந்த அந்த முதியவர்படுத்திருந்த அறைக்குள் நுழைந்தார் விக்கிள்ஸ்வொர்த்.

“இயேசுவின் நாமத்தினாலே இந்த மனிதனைத் துன்புறுத்தும் பொய்யின் ஆவியே, இவனை விட்டு வெளியேவா” எனக் கட்டளையிட்டார். உடனே அந்த மனிதன் சொஸ்தமானான். அவனது அமைதி திரும்பிற்று. இரட்சிப்பின் நிச்சயம் அவனுக்குள் மீண்டும் உதித்தது. (தொடரும்)

## இயேசு கிறிஸ்துவின்

# சிலுவையைப்பற்றிய உபதேசம்

**வேதபாடம்**

### இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணம்

"*அவர் (இயேசு கிறிஸ்து) மனுஷ ரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்*" (பிலிப்பியர் 2:8).

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணமானது புதிய ஏற்பாட்டின் புத்தகத்தில் 175 தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் சிலுவையையும் நாம் எளிதாய்ப் பிரித்துவிட முடியாது. இயேசுவின் சிலுவை மரணம், மனிதன் தேவனிடத்தில் வந்து சேருமாறுள்ள பாதையில் தடையாக நின்ற, பாவத்தின் மரணமாயிருக்கின்றது.

ஆகையால் நாம் சிலுவையைக் குறித்துத் தியானிக்கும்போதெல்லாம் இயேசுவின் மரணத்தைக்குறித்தே தியானிக்கின்றோம். இயேசு கிறிஸ்துவின் மரணமானது எத்தகையத் தன்மையுடையது? இவ்வுலகில் நாள்தோறும் ஆயிரக்கணக்கில் மக்கள் மடிகின்றார்கள். ஆயினும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மரணமோ ஏனைய மனுமக்களின் மரணத்தினின்றும் முற்றிலும் மாறுபட்டதும் தனிச்சிறப்புடையதுமாயிருக்கின்றது. இப்பொழுது நாம் அவருடைய சிலுவை மரணத்தைக் குறித்துத் தியானிப்போம்.

அவருடைய மரணமானது யாவராலும் ஆச்சரியப்படுவதற்குரிய மரணமாயிருக்கின்றது. "*அவர் இத்தனை சீக்கிரத்தில் மரித்துப்போனாரா என்று பிலாத்து ஆச்சரியப்பட்டு, நூற்றுக்கு அதிபதியை அழைப்பித்து: அவர் இதற்குள்ளே மரித்தது நிச்சயமா என்று கேட்டான்*" (மாற்கு 15:44). சிலுவையில் மாண்ட ஏனைய மக்களின் மரணங்களினின்றும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவை மரணம் எங்ஙனம் வேறுபாடு உடையது? இயேசு கிறிஸ்து சிலுவை மரணத்தின் சிறப்புக்கூறுகள் யாவை? இவைகளைக்குறித்து தேவன் தாமே நமக்கு போதித்தருள்வாராக!

### வெட்கக்கேடான மரணம்

"*அவர் தம்முடைய ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு,...*" (ஏசாயா 53:12).

"*மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்*" (கலாத்தியர் 3:13).

பொதுவாக, ரோம சாம்ராஜ்ஜியத்தில் கொள்ளைக்காரர்கள், கொலைபாதகர், ரோம நாட்டுப் பிரபுக்களிடம் வேலைபார்க்கும் அடிமைகள் ஆகியோர்க்குக் கொலைத் தண்டனை விதிக்கப்படும்போது, அவர்கள் நிர்வாணமாக்கப்பட்டு, சிலுவையில் தூக்கப் படுவார்கள். அவ்வண்ணமே பரிசுத்தராகிய நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டார். அவரை அரை நிர்வாணமாக்கி சிலுவையில் அறைந்தார்கள். இதனைக் குறிப்பிடும்போது வேதாகமம், "*போர்ச்சேவகர் இயேசுவைச் சிலுவையில் அறைந்தபின்பு, அவருடைய வஸ்திரங்களை எடுத்து, ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்வொரு பங்காக நாலு பங்காக்கினார்கள்; அங்கியையும் எடுத்தார்கள். அந்த அங்கி, தையலில்லாமல் மேலே தொடங்கி முழுவதும் நெய்யப்பட்டதா*

[illegible] இயேசு [illegible] [illegible] கிறிஸ்துவைப் [illegible] [illegible] [illegible] பெலனும் தேவனுடைய ஞானமுமாயிருக்கிறார்'' என்று கூறுகின்றது ([illegible] 1:23,24). மேலும், எபிரெயர் 12:2 [illegible] இயேசு தமக்கு முன்வைத்திருந்த [illegible] பொருட்டு அவமானத்தை [illegible] சிலுவையைச் சகித்தார் என்று [illegible] கின்றது.

[illegible] மரத்தில் தூக்கிப் போடப்பட்டவன் [illegible] சபிக்கப்பட்டவன் என்றும் [illegible] கூறுகின்றது. (கலாத்தியர் 3:13, [illegible] 21:22,23 வசனங்கள் பார்க்க). [illegible] நம்முடைய கர்த்தராகிய இயேசு [illegible] கத்தை, அவமானமும் வெட்கக் [illegible] மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார். [illegible] ய மரணம் சாபத்தீட்டான ஒரு [illegible] எண்ணப்பட்டது. இவ்வாறு அவர் [illegible] சாபத்திற்கும் அவமானத்திற்கும் [illegible] ஒப்புக்கொடுத்தார். இப்படியிருக்க, [illegible] நிலைமைதான் என்ன? நம்முடைய [illegible] லிருந்தும் வெளியே வருவதற்கேது [illegible] அவைகளைக்குறித்து வெட்கப்படு[illegible]? அவைகளை வெறுக்கின்றோமா? "[illegible] களை மறைக்கிறவன் வாழ்வடைய [illegible]; அவைகளை அறிக்கைசெய்து [illegible] கிறவனோ இரக்கம் பெறுவான்" ([illegible] 28:13) என்று திருமறை [illegible]. கிறிஸ்துவை விட்டுப் பின்வாங்கின [illegible] கதி என்ன? அவர்களைக் குறித்து, "[illegible] ஒருதரம் பிரகாசிக்கப்பட்டும், பரம [illegible] ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் [illegible] தேவனுடைய நல்வார்த்தையையும் [illegible] உலகத்தின் பெலன்களையும் ருசி [illegible] மறுதலித்துப்போனவர்கள், தேவ [illegible] குமாரனைத் தாங்களே மறுபடியும் [illegible] அறைந்து அவமானப்படுத்துகிற [illegible] மனந்திரும்புதலுக்கேதுவாய் அவர்களை [illegible] புதுப்பிக்கிறது கூடாதகாரியம்" ([illegible] 6:4-6) என்று திருமறை கூறுகின்றது.

கிறிஸ்தவ உலகத்தில் இந்நாளிலும் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைக் குறித்து அறிக்கையிடுவதை வெட்கப்படுகின்ற மக்கள் இருக்கின்றார்கள். கிறிஸ்தவ உலகத்தின் காணப்படும் களங்கமும் வெட்கக்கேடுமான காரியம் இதுவே. ஆயினும் அவரோ நமக்காக அவமானத்திற்கேதுவான தம்முடைய பாடு மரணத்தைக்குறித்து வெட்கப்படவில்லை.

''*மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன்*'' (மத்தேயு 10:32,33) என்று இயேசு கூறுகின்றார்.

ஆகையால், ''*ஒருவன் கிறிஸ்தவனா யிருப்பதினால் பாடுபட்டால் வெட்கப்படாம லிருந்து, அதினிமித்தம் தேவனை மகிமைப் படுத்தக்கடவன்*'' (1 பேதுரு 4:16).

அதுபோலவே நமக்கு அளித்துள்ள வெளிப்பாடுகள், உபதேசங்கள் ஆகியவை களைக்குறித்தும் நாம் வெட்கப்படக்கூடாது. ஒருவேளை அவைகளினிமித்தம் நிந்தை களையும் பாடுகளையும் அநுபவிக்க நேரிடின், அவைகளுக்காக நாம் தேவனை மகிமைப் படுத்தவேண்டும்.

### விருப்பத்தோடு உளமார ஏற்றுக்கொண்ட மரணம்

''*அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார்*'' (பிலிப்பியர் 2:8).

"சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்'' என்னும் கூற்றை நோக்குக. ''... *இதோ, வருகிறேன், புத்தகச்சுருளில் என்னைக்குறித்து எழுதியிருக்கிறது; என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன்; உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது...*'' (சங்கீதம் 40:7,8) என்னும்

தீர்க்கதரிசன வசனத்தின் நிறைவேறுதலாக, இயேசு கிறிஸ்து சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். இவ்வாறு இயேசுவின் இதயமாம் பலகையில் தேவனுடைய சித்தமானது எழுதப்பட்டிருந்தது.

*"... ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். நான் என் ஜீவனை மறுபடியும் அடைந்துகொள்ளும்படிக்கு அதைக் கொடுக்கிறபடியினால் பிதா என்னில் அன்பாயிருக்கிறார். ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக் கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக் கொண்டேன்..."* (யோவான் 10:15,17,18) என்னும் இயேசுவின் வாய் மொழியானது விருப்பத்தோடு உளமார ஏற்றுக்கொண்ட இயேசுவின் சிலுவை மரணத்தின் மெய் நிலையை நமக்குத் தெளிவுபடுத்துகின்றது. இயேசுவின் சிலுவை மரணத்தை இரத்த சாட்சியாய் மரித்த பற்பல தியாகச் செம்மல்களின் மரணங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கலாமோவெனின் அது கூடாது. யாதாமோர் உயர் இலட்சியத்தை முன்னிட்டு அவர்கள் தங்கள் பொன்னுயிரைத் தியாகம் செய்தார்களென்பது மெய்தான். ஆயினும் அவர்களுடைய உலக வாழ்க்கை அத்துடன் முற்றுப் பெறுகின்றது. மீண்டும் உயிர்பெற்று வருதல் என்பது அவர்களால் கூடாது. இயேசுவுக்கோ, தம்முடைய உயிரைக் கொடுக்கவும் அதனை மீண்டும் எடுத்துக் கொள்ளவும் அதிகாரம் உண்டு.

இக்கருத்தினை யோவான் 2:19-22 வசனங்களும் வன்மையுடன் ஆதரிக்கின்றன. அது வருமாறு: "இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக இந்த ஆலயத்தை இடித்துப் போடுங்கள், மூன்று நாளைக்குள்ளே இதை எழுப்புவேன் என்றார். அப்பொழுது யூதர்கள்: இந்த ஆலயத்தைக்கட்ட நாற்பத்தாறு வருஷம் சென்றதே. நீர் இதை மூன்று நாளைக்குள்ளே எழுப்புவீரோ? என்றார்கள். அவரோ தம்முடைய சரீரமாகிய ஆலயத்தைக் குறித்துப் பேசினார். அவர் இப்படிச் சொன்னதை அவர் மரித்தோரிலிருந்தெழுந்த பின்பு அவருடைய சீடர்கள் நினைவுகூர்ந்து வேதவாக்கியத்தையும் இயேசு சொன்ன வசனத்தையும் விசுவாசித்தார்கள்." இயேசு கிறிஸ்துவுக்கு, தம்முடைய உயிரை மீண்டும் எடுத்துக்கொள்ளுதற்குரிய அதிகாரம் உண்டு என்னும் மெய்நிலையானது அவர் தம் சிலுவை மரணத்தை நினைவுகூர்ந்து விசுவாசிப்பதற்கு நமக்குப் பேராதரவாயிருக்கின்றது.

இயேசுவானவர்தாமே மிகுந்த நன்றியறிதலோடும், விருப்பத்துடன் உளமார்ந்த காணிக்கையாகவும் பாவநிவாரண பலியாகவும் சிலுவையில் தம்மை ஒப்புக்கொடுக்கவிட்டால், அவருடைய சிலுவை மரணமானது தேவனுக்குச் சுகந்தவாசனையாக இருக்க முடியாது.

இங்கேதான் 2 கொரிந்தியர் 8:9 வசனத்திலுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் தயவுள்ள கிருபையானது அமைந்து கிடக்கின்றது. அது வருமாறு "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே, அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும் நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே."

இங்கு நாம் கற்றுக்கொள்ளுதற்குரிய பாடம் யாது? இயேசுவைப் போலவே பிதாவாகிய தேவனுடைய சித்தத்தைச் செய்யும்படி நாமும் எப்பொழுதும் கீழ்ப்படிதலுள்ளவர்களாயிருக்க வேண்டும். *"... ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது ..."* (மத்தேயு 26:39) என்னும் இயேசுவின் வாய்மொழி நம்முடைய வாய்மொழியாயிருக்க வேண்டும். மற்றவர்களுடைய நன்மைக்காக நம்மை நாமே எப்பொழுதும் ஆவலோடு ஒப்புக்கொடுக்க ஆயத்தமாயிருப்போமாக. (தொடரும்)

# கிழியுண்ட திரை

[illegible]

குல்ஷான் எஸ்தர்

...பை நாட்களில் தேவனுடைய ...தையைத் தியானம்பண்ணும்பொருட்டு ...களிடமிருந்து என்னை அடைத்துக் ...ன். அவர்களில் அநேகர் பொல்லாப்பை ...மென்றே செய்யும் குற்றவாளிக ...அக்கிரமக் கும்பல்களின் அங்கத்தினர் ... பெரிய பட்டணங்களின் கழிவுப் ...களைப் போன்றவர்களாகவும், கடைத் ...களாகவும், ஜேப்படி திருடர்களாகவும், ...க கடத்துபவர்களாகவும் இருந்தனர்.

...ந்தி வடமேற்கு எல்லை மாகாணத்தில் ...ய கணவனைக் கொன்ற கொலைப் ...கவும் இருந்தாள் என்று அறியவந்தேன்.

...யோ, என்னுடைய பெருமை ...வாக இருந்தது! இந்தச் சிறைச்சாலை ... என் பெருமையிலிருந்து முற்றிலுமாக ...கவே ஏற்படுத்தப்பட்டிருந்தது என்று ...தேன்.

நான் பொறுமையோடும், அமைதி ... எனது வேதபுத்தகத்தை வாசித்துக் ...டிருந்ததைக் கண்ட என் சககைதிகள் ... அதிகமதிகமாக மதிக்க ஆரம்பித்தனர். ...என்ன வாசிக்கிறேன் என்பதை அறிந்து ...ளும் பேராவல் அவர்களில் அதிகரித்தது. ... அவர்களுக்குப் புதிர்போலானேன். ...தனை நானே தீர்க்கவேண்டியதாயிற்று.

கொடுமையும் பொல்லாப்பும் தனது ...களாகப் பொறித்த முகமுடைய கைதியான ... இளம்பெண் என்னை நெருங்கினாள்.

"இவ்வளவு ஆர்வத்துடன் நீ படித்துக் ...டிருக்கும் அந்தப் புத்தகம்தான் என்ன?" ... வினவினாள்.

நான் அந்தப் பெண்ணை நிமிர்ந்து ...த்தேன். "நீ இந்தப் புத்தகத்தை இவ்வளவு கருத்தோடு எங்களைப் பொருட்படுத்தாமல் இத்தனை நாட்களும் படித்துக்கொண்டேயிருக்கிறாயே! அது அவ்வளவு அருமையான புத்தகமா? அது எதைப்பற்றிச் சொல்லுகிறது?" என்று ஆர்வத்துடன் கேட்டாள்.

"இந்தப் புத்தகத்தில் என்ன எழுதப்பட்டிருக்கிறது என்று அறிய உனக்கு மெய்யாகவே ஆசைதானா?" என்றேன்.

"ஆம், நரகக்குழிபோன்ற இச்சிறைச்சாலையின் அறையில் நேரத்தைப் போக்க எதுவாக இருந்தாலும் சரிதான்" என்றாள்.

அப்பெண்ணின் பெயர் கால்சோம் என்று அறியவந்தேன். நாங்களிருவரும் பேசுவதைக் கேட்டவுடன் ஏனைய பெண்கள் தாங்கள் பேசுவதை நிறுத்தி எங்கள் உரையாடலைக் கவனித்துக்கேட்க ஆரம்பித்தனர்.

அப்பெண்களுக்கு இயேசுவைக் குறித்துப் பேச ஆரம்பித்தேன்.

வேதபுத்தகத்தைக் கையில் எடுத்துப் பிடித்துக்கொண்டு, "இது ஒரு கண்ணாடி" என்றேன்.

"அது எப்படி கண்ணாடியாக இருக்க முடியும்? அது ஒரு புத்தகம்தானே" என்றாள் மற்றொரு கைதி. அவள் பெயர் காட்டூன். தான் சொன்ன இக்கருத்துக்கு ஆதரவு தேடி அவள் தன் தோழிகளைச் சுற்றி நோக்கிப்பார்த்தாள்.

"ஆம், இது ஒரு புத்தகம்தான். ஆனால், இது ஒரு கண்ணாடியும்கூட. ஏனெனில், எல்லா மனிதருக்கும் நியாயாதிபதியாகிய தேவனுடைய பார்வைக்குமுன் நாம் எப்படிக் காணப்படுகிறோம் என்பதைக் காண்கிறோம்" என்றேன். "ஐயோ, நாங்கள் அதில் பயங்கரமாக அல்லவோ காணப்படுவோம்" என்று மற்றொரு

பெண் கலகலவென்று சிரித்துக்கொண்டே சொன்னாள்.

"நீ சொல்வது சரியே. இக்கண்ணாடி நாம் செய்கிற காரியங்களில் தவறானவற்றை நமக்குச் சுட்டிக்காண்பித்து அவைகளை, 'பாவம்' என்று அழைக்கிறது. நமது பாவங்கள் மனிதர் பார்வையிலும், தேவனுடைய பார்வையிலும் சரியானது இல்லை. மனிதர் நம் பாவங்களைக் குற்றமென்று தீர்த்து, நாம் செய்த தவறுக்காக நம்மைத் தண்டிப்பர். அப்படியானால், தேவன் பரிசுத்தராக இருப்பதால் நமது பாவங்களைக் குற்றமென்று தீர்த்து, நம்மை எவ்வளவு அதிகமாகத் தண்டிக்கவேண்டும்!

"பாவம் ஒருபோதும் தேவனைப் பிரியப்படுத்தாது. அதற்கு மாறாக, அது தேவனைச் சினமுறச்செய்யும். ஆகவே, பாவத்தைத் தேவன் மரணதண்டனையாலேயே தண்டிக்க வேண்டும்" என்று அழுத்தமாகக் கூறினேன்.

தங்களுக்கான தண்டனைகளுக்காகக் காத்துக்கொண்டிருந்த அப்பெண்கள் என் பேச்சை மிகுந்த அக்கறையுடன் இப்பொழுது கேட்க ஆரம்பித்தனர். நான் தொடர்ந்து பேசினேன்.

"அப்படியானால் எங்களுக்குத் தப்பும்படியான மார்க்கமே இல்லையா? நாங்கள் தண்டனையைப் பெற்று அனுபவித்துத்தான் தீர வேண்டுமா? என்று நீங்கள் நினைக்கக்கூடும். ஆனால் இக்கண்ணாடியோ தேவன் பாவத்தோடு கிரியை செய்யும்படியாக இரண்டு வழிகளை வைத்திருக்கிறார் என்று காண்பிக்கிறது. ஒரு வழி மரணத்திற்குக் கொண்டுசெல்லும். அடுத்த வழியோ, ஜீவனுக்குக் கொண்டுசெல்லும். நாமே, நாம் எந்த வழியாகச் செல்லவேண்டுமென தெரிந்துகொள்ளலாம்."

இளைப்பாறுதலற்ற அமைதியை முறித்து கால்சோம் ஒரு கேள்வி கேட்டாள்: "இந்தக் கண்ணாடி இக்காரியங்களையெல்லாம் எப்படிச் செய்துவிடக்கூடும்?"

நமது பாவங்கள் யாவும் மன்னிக்கப்படுவதற்கான வழியைத் தேவனே ஆயத்தப்படுத்தி வைத்திருக்கிறார் என்று இ காண்பிக்கிறது.

"நமது பாவங்கள் யாவும் மன்னிக்கப்படும்படியாக நாம் நமது பாவங்களே அவரண்டைவரும்படியாக நம்மை அவர் அழைக்கிறார். '*வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்*' (மத்தேயு 11: 28) என்று இப்புத்தக கூறுகிறது" என்றேன்.

கைதிப் பெண்களின் உள்ளங்க இவ்வார்த்தைகளுக்கு இணங்கிக் கொடுப்பதை கண்டு நான் அதிசயித்தேன். வேதவசனத்தி வாதங்களை மிக நுட்பமாகக் கேட்டு புரிந்துகொண்டனர் என்பது தெளிவாயிற்று உள்ளம் திறந்து பேசினாள் ஒரு பெண்.

"நாங்கள் பாவத்தால் பாரமேற்று தவிக்கிறோம் என்பதை மறுக்கமுடியாது அதனாலேயே நாங்கள் இங்கிருக்கிறோ நாங்கள் செய்துவிட்ட காரியத்தை ஒருவரால் எங்களிலிருந்து எடுத்துவிடமுடியாது" என்றா

"*நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியு உள்ளவராயிருக்கிறார்*" (1 யோவான் 1:9) என்ற வசனத்தை வாசித்து, தேவன் அருளு பாவமன்னிப்பின் சித்தாந்தத்தைத் தெளிவா விளக்கிச்சொன்னேன்.

அப்பெண்களில் அநேகர் தங்க மேலிட்ட உணர்ச்சியால் உருகினர். அவர்க கண்களில் நிறைந்த கண்ணீர் மின்னிற்று தங்களுக்கு இந்த அன்பின் சத்தியத்தை, நா இன்னும் அதிகமாகக் கற்றுத்தரும்ப கெஞ்சினர். ஒவ்வொரு நாள் காலையிலும் நா அவர்களில் சிலரைக் கூட்டி வேதத்தி சத்தியங்களைக் கற்றுக்கொடுப்பதாக ஒத்து கொண்டேன். (தொடரும்



# The Lord's Table

Luke 24:30

*"And it came to pass, as He sat at meat with them, he took bread, and blessed it, and brake, and gave to them."*

Two disciples went from Jerusalem to a village called Emmaus. Jesus went with them, but they did not recognise Him. The disciples did not believe that Jesus had risen from the dead. Jesus rebuked them. They realised their sin of unbelief and requested Him to abide with them. He went in and took bread, blessed it, broke it and gave it to them.

What Jesus did with the bread, He is willing to do with young men and young women. If young people surrender their lives to Jesus then Jesus can bless them and do wonderful things in their lives. The Bible says in Eccl 12:1, *"Remember now thy Creator in the days of thy youth, while the evil days come not, nor the years draw nigh, when thou shalt say, I have no pleasure in them."*

Eccl 12:14 cites, *"For God shall bring every work into judgment, with every secret thing, whether it be good, or whether it be evil."*

## 1. Jesus took bread

Every young man should think that his life is not in his hands. His life is in the hands of Jesus. Jesus said in John 10:28 that those who hear his voice shall never perish neither shall any man pluck them out of His hand.

Jesus met Saul on the way to Damascus. Saul saw a dazzling light when he fell from the horse. He heard the divine voice. Saul became Paul. He committed his life and future to the Benefactor. He renounced his wicked ways and turned to the Saviour. Old things passed away. All things became new. He put on the new man. He placed himself in the hands of the Master. He was possessed with new attitudes. He was irresistibly drawn to the Lord. Jesus took him and began to control him. Paul was translated from the kingdom of darkness into the kingdom of Jesus. The transformation was marvellous and real. Jesus declared an immutable fact about Paul—"He is my chosen vessel." Every young man should thank the Lord for being taken from the miry clay and placed on Jesus the solid Rock.

## 2. Jesus blessed it

Just as Jesus blessed the bread after taking it, He blesses anyone He takes. Jesus blessed Paul. Ananias went to Paul and blessed him with sight and helped him to be filled with the Holy Spirit. Paul received the forgiveness of sins and was baptized

(Acts 9:17,18). Luke 1:77 renders thus: "*To give knowledge of salvation unto the people by the remission of their sins.*" Gipsy Smith, the renowned preacher said that the jail keeper washed the wounds of Paul and Silas. In the same manner it is imperative that we are cleansed from the wounds of the past. The maxim is: cleanse the past, consecrate the present and clarify the future. God blessed Paul with strength after taking meat. After receiving two gifts, namely forgiveness of sins and the anointing of the Holy Spirit, Paul was ready for His Master's service. The Bible says that Paul arose and straightaway preached the gospel. Paul presented the good news to kings and dignitaries. Eventually, Paul became an ambassador to the nations beyond. The greatest blessing bestowed on Paul is: He turned the world upside down.

### 3. Jesus broke it

After blessing the loaf that Jesus took, He broke it. He often has to break us. He breaks us with sorrow and disappointment. Jesus took Paul and blessed him. He has to do the necessary job of breaking Paul with sorrow, slander and scourage. On one occasion forty men banded together and plotted to kill him. Providentially, the disaster was averted. Acts 17:32 says, "*And when they heard the resurrection of the dead, some mocked...*" When Paul preached about the resurrection of Jesus, people sneered and jeered at him. The enemies of the cross despised the crucial part of resurrection. From Acts 24:5, we learn about the brazen accusation foisted on Paul. "*For we have found this man a pestilent fellow, a mover of sedition among the Jews throughout the world and a ringleader of the sect of the Nazarenes.*" Brokenness is a blessing; it brings about tranquillity and serenity. Serenity in suffering is a stable testimony. God dwells among the broken and the contrite hearts to revive the drooping spirit. Paul's commendable ministry replete with suffering and shame culminated in martyrdom. He joined the galaxy of the saintly unsung heroes of faith.

### 4. Jesus handed it over

After breaking the bread, Jesus handed it over to the disciples. Jesus took the bread, blessed it, broke it and passed it on to His followers. In the same manner Jesus broke Paul with humiliation and used him for other people. Paul became a messenger, carrying the good news to the far flung frontiers of the globe. God was the source. Paul was a channel. By way of healing and the ministry of the Word, Paul became an unclogged avenue of comfort and courage to the masses. Paul closed his earthly pilgrimage with the impressive words recorded in II Timothy 4:7, "*I have fought a good fight, I have finished my course, I have kept the faith:*"

O, Christ! take my life and bless it and break it and hand it on to others for I would be free of an inner tied-up condition. I would be free to give. Thou hast given me all: help me to give all. Amen.

# பயத்திற்கும் திகிலுக்கும் விடுதலைதரும் தேவன்

*"... பயமில்லாதிருப்பாய்; திகிலுக்குத் ...வாய், அது உன்னை அணுகுவதில்லை"* (...ா 54:14).

என் அருமைப் பிள்ளைகளே! இயேசு ...துவின் இணையற்ற நாமத்தில் உங்களை ...துகிறேன். உங்கள் கல்வி ஆண்டின் ...யில் நீங்கள் வந்துவிட்டீர்கள் அல்லவா? ...த் தேர்வுக்கு நல்ல முறையில் ஆயத்தம் ...திருக்கிறீர்களா? தேவையற்ற பயத் ..., திகிலுக்கும் இடங்கொடாதிருங்கள். ...லயேல், அவைகள் உங்களை மேற் ...ளும். தேவனிடத்தில் விசுவாசமாயிருந்து ...லத் தூரமாக அகற்ற முடியும் என்பதை ...துகொள்ள, கீழ்க்காணும் கதையை ...ங்கள்.

"டேய், கிறிஸ்டோபர்! என்ன, ...சக்கு ஆயத்தமாகிவிட்டாயா? நீ இந்தக் ...குப் பரீட்சையில் நூற்றுக்கு நூறு வாங்கி ...வாய் என்று எண்ணுகிறாயா? கொஞ்சங் ...ந்தான்" என்று சொல்லி, நடந்து ...ண்டிருந்த கிறிஸ்டோபரை மடக்கிக் ...டான் ரவி.

"ரவி! நான் இயேசு அப்பாவின் ...ளை. நிச்சயமாய் நூற்றுக்கு நூறு ...ங்குவேன், சந்தேகமேயில்லை" என்று ...தியாகக் கூறினான் கிறிஸ்டோபர்.

"டேய்! அப்படியெல்லாம் சொல்லாதே. ...சசோ! மறந்துவிட்டேனே! இந்தா உனக்கு ... பரிசு. ஆனால், இதை இப்பொழுது ...க்கக்கூடாது, பரீட்சை அறைக்குப் போய் ... இடத்தில் அமர்ந்தவுடன்தான் பிரிக்க ...வேண்டும்" என்று சொல்லி, ஒரு காகிதப் ...லத்தைக் கொடுத்தான்.

கிறிஸ்டோபரும் அதை வாங்கிக் கொண்டு, பரீட்சை அறையில் போய், தன் இருக்கையில் அமர்ந்து, அந்தப் பொட்டலத்தைப் பிரித்தான். அதற்குள்ளிருந்த இரப்பர் பாம்பு ஒன்று குதித்து வெளியேவந்தது. அப்போது கிறிஸ்டோபர் 'ஓ' வென அலறி, மயங்கிக் கீழே விழுந்தான். செய்வதறியாது ஆசிரியர் ஓடிவந்தார். அதற்குள்ளாகப் பாம்பு பொட்டலத்தை எடுத்து மறைத்துவிட்டனர் ரவியும் அவனது நண்பர்களும்.

ஏழாம் வகுப்பு மாணவனான கிறிஸ்டோபர் நன்றாகப் படிக்கும் ஆற்றல் படைத்தவன். ஆனால் பயந்த சுபாவமுள்ளவன். அவனைப் பயமுறுத்தத் தீட்டிய திட்டம் இது. அவன் மயங்கிவிழுந்துவிடுவான் என்பதை அவனது நண்பர்கள் எதிர்பார்க்கவில்லை.

கிறிஸ்டோபரைத் தலைமை ஆசிரியரின் அறைக்குத் தூக்கிக்கொண்டு சென்றனர். முகத்தில் தண்ணீரை அடித்தும் அவன் சுய நினைவுக்குத் திரும்பாததால், தலைமை ஆசிரியர் அவன் பெற்றோருக்குத் தகவல் தெரிவித்தார். கிறிஸ்டோபரின் பெற்றோர் கண்ணீரோடு தலைமை ஆசிரியரின் அலுவலகத்துக்குள் ஓடிவந்தனர். அப்பொழுது கண்களைத் திறந்த கிறிஸ்டோபர் தன் தாயை நோக்கி ஓடினான். அவர்களைக் கட்டிப்பிடித்த கிறிஸ்டோபரின் உடல் நடுங்கியது. அவன் மருண்ட பார்வையுடன் காணப்பட்டான். அவன் கண்களினின்று நீர் தாரைத் தாரையாகச் சொரிந்தது. பேச முடியாமல் நடுங்கினான்.

அப்பொழுது அவன் தந்தை, "சார்! என் மகன் கிறிஸ்டோபர் எதையோ பார்த்துப்

பயந்திருக்கிறான். அவனுக்குப் பாம்பு என்றால் அதிக பயம். அந்தப் பயம் அவனுக்குத் திகிலாக மாறிவிடும். இந்தப் பயத்திற்காக எத்தனையோ மருத்துவர்களைச் சந்தித்தோம். எனினும், ஒருவராலும் அவனைக் குணப்படுத்த இயலவில்லை. மனோதத்துவ முறையில் அவனைக் குணப்படுத்த முடியும் என்பது மருத்துவர்களின் எண்ணம். ஆனால் அதைச் சரிப்படுத்தமுடியுமா என்பது, எங்களுக்குச் சந்தேகம்'' என்றார். மேலும் அவர், ''சார்! இவ்விடத்தில் அவன் எப்படிப் பாம்பைப் பார்த்திருப்பான்?'' என்றார்.

பள்ளியின் தலைமை ஆசிரியரின் அனுமதியுடன் அவனை அழைத்துக்கொண்டு வெளியேவந்த அவன் பெற்றோர் செய்வதறியாது திகைத்து நின்றனர். பின்பு, அவனை அழைத்துக்கொண்டு மெள்ள நடந்தனர்.

போகும் வழியில் அமைந்திருந்த ஒரு சிறிய வீட்டிலிருந்து தெளிவாக, *"பயமில்லாதிருப்பாய்; திகிலுக்குத் தூரமாவாய், அது உன்னை அணுகுவதில்லை"* என்று பாடும் சத்தம் கேட்டது.

இருவரும் அப்படியே நின்றனர். கிறிஸ்டோபரோ தன் தந்தையைக் கட்டிப் பிடித்தவனாய் மருண்ட நிலையில் நடந்து கொண்டிருந்தான். மூவரும் சேர்ந்து அவ்வீட்டின் வாசலில் வந்து நின்றனர். அவர்கள் நிற்பதைக் கவனித்த அவ்வீட்டிலுள்ள ஒருவர் வெளியே வந்து, அவர்களிடம் அன்போடு பேசி, உள்ளே அழைத்துச்சென்றார்.

அவர்களைக் கண்ட போதகர், பயந்து நடுங்கிக்கொண்டிருந்த கிறிஸ்டோபரையும் அவனுடைய பெற்றோரையும் வரவேற்று, அவர்களுடைய கண்ணீருக்கான காரணத்தைக் கேட்டார். கிறிஸ்டோபரின் பயத்தையும் அதைப் போக்குவதற்கான வழியையும் அறியாத பெற்றோர் கண்ணீர்விட்டனர்.

போதகரோ புன்முறுவலுடன், ஏசா. 54:14ஐத் தெளிவாக வாசித்தார். தேவ தம்முடைய பிள்ளைகளைத் திகில் அணுகா பாதுகாப்பார் என்ற வாக்குத்தத்தத்தைப் பற் பிடித்து ஜெபிக்கும்பொழுது, கர்த்தர் நிச்ச கிறிஸ்டோபரை விடுவிப்பார் என்பதை உணர்த்தினார். உடனே அந்த வாக்குத் தத்தைச் சுதந்தரித்துக்கொண்டு, அந்த மூவ பேரும் ஜெபித்தனர்.

என்ன ஆச்சரியம்! பயந்து கொண்டிருந்த கிறிஸ்டோபர் மெள்ளமெள்ள, தைரி மடைந்தான். நடுங்கிக்கொண்டிருந்த அவ உடல் அமைதிப்பட்டது. அவனுடைய மாற்ற அவனைச் சுற்றியிருந்தவர்களின் விசுவாசத்தை அதிகரிக்கச்செய்தது. மெள்ள எழுந் அமர்ந்தான். ஆவியானவர் அவனிடம் கிரியை செய்ய ஆரம்பித்தார்.

தான் பயந்ததின் காரணத்தை தெளிவாக மற்றவர்களுக்குக் கூறினான். உடனே வெகுண்டு எழுந்தனர் அவன் பெற்றோர். ஆனால் கிறிஸ்டோபரோ, தன் நண்பர்களைத் தான் மன்னித்துவிட்டதாகவும் எதையுமே தலைமை ஆசிரியருக்குத் தெரியப் படுத்தவேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டான். மருத்துவர்களாலும் மருத்துவத் தாலும் மாற்ற முடியாத பயத்தையும் திகிலையும் வேத வசனம் போக்கியதை எண்ணி வியந்தனர் அவனுடைய பெற்றோர்.

என் அருமைப் பிள்ளைகளே ஒருவேளை நீங்களுங்கூட தேவையற்ற பயத்தினாலும், திகிலினாலும் பிடிபட்டு, தேர்வுக்கு முன்பாக எதிர்மறையான எண்ணங்களோடு போராடிக்கொண்டிருக்கிறீர்களா? கவலை வேண்டாம்! வேத வசனத்தைப் பற்றிப் பிடித்து ஜெபியுங்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து உங்களை விடுதலையாக்கி, தேர்விலும் நல்ல மதிப்பெண்களைப் பெற உதவிசெய்வார்.

# சாட்சிப்பகுதி

### திக்கற்றவர்களின் ஜெபத்தைக் கேட்கும் தேவன்

என் பெயர் சுகந்தி. நான் ஓட்டேரியில் வாழ்ந்துவருகிறேன். அப்போஸ்தல கிறிஸ்தவ சபையில் அங்கம் வகித்துவருகிறேன். என் மகன் சுரேஷ் கிங் 15.7.2010 அன்று அடைப்பு நோயால் பாதிக்கப்பட்டு, மருத்துவ மனையில் ICU வார்டில் சேர்க்கப்பட்டான். அவனது சரீரம் எந்த மருந்துக்கும் பொருந்தாது காணப்பட்டது. ஆகவே, அவன் மரித்து விடுவான் என்றும், சுற்றத்தாரெல்லாருக்கும் அறிவித்துவிடும்படியும் தாயாகிய என்னிடம் மருத்துவர்கள் கூறினர்.

நான் சற்றும் கலங்காமல் அம்மாத வாக்குத்தத்தமான, "*திக்கற்றவர்களுடைய ஜெபத்தை அலட்சியம்பண்ணாமல், அவர்கள் விண்ணப்பத்தை அங்கீகரிப்பார்*" (சங்கீதம் 102:16) என்றுள்ள வசனத்தைப் பற்றிப்பிடித்து ஜெபித்தேன். நமது சபையின் சங்கிலி ஜெபத்திலும் அவனுக்காக ஜெபித்தனர். மருத்துவமனையிலிருந்து என் மகனை நிச்சயமாக உயிரோடு அழைத்துச் செல்லுவேன் என்ற விசுவாசத்தோடு ஜெபித்துவந்தேன்.

திக்கற்றவர்களின் ஜெபத்தை அலட்சியம் பண்ணாத தேவன், எனது ஜெபத்தைக் கேட்டார். 23.7.2010 அன்று, அதாவது ஒரு வாரத்துக்குப்பின்பு, ஜீவனோடும் நல்ல சுகத்தோடும் நான் என் வீட்டிற்கு அவனை அழைத்துச்செல்ல, கர்த்தர் உதவிசெய்தார். கர்த்தருக்கே துதி, கனம் மகிமை உண்டாவதாக.

"*திக்கற்றவர்களாய்ப்போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன்; உன் விதவைகள் என்னை நம்புவார்களாக*" (எரேமியா 49:11). ஆமென்.

சுகந்தி,
ஓட்டேரி.

### பரிகாரியாகிய கர்த்தர்

என் பெயர் ஏ. கலா. நான் அயனாவரத்தில் வசிக்கிறேன். நாங்கள் அநேக வருடங்களாக ஏ.சி.ஏ. திருச்சபைக்கு வந்து கொண்டிருக்கிறோம். கடந்த சில மாதங் களுக்கு முன்பாக எனது வலது மார்பகத்தில் தாங்க முடியாத வலி வந்தது. நாங்கள் சங்கிலித் தொடர் ஜெபத்திலும் மற்றும் அநேக போதகர்களிடத்திலும் சொல்லி ஜெபிக்க, ஜெபக்குறிப்பு எழுதிக் கொடுத்தோம். அநேகர் எங்களுக்காக ஜெபித்தார்கள். நாங்கள் டாக்டரை அணுகும்போது "பயாப்சி டெஸ்டுக்கு அனுப்பிய ரிப்போர்ட் வந்தபிறகுதான் சொல்ல முடியும். 100 சதவீதம் இது புற்றுநோயாக இருக்கலாம். அப்படியிருந்தால் மார்பகம் அகற்றப்படவேண்டும். அல்லது கீமோ தெரபி, ரேடியேஷன் கொடுக்கவேண்டும்" என்று சொல்லிவிட்டார்கள். நாங்கள் தேவனிடம் கருத்தாய் ஜெபித்தோம்.

ஒரு சிறிய அறுவைசிகிச்சை நடை பெற்றது. அப்போது டாக்டர்கள் ஆச்சரியப் பட்டார்கள். இது சீழ்க் கட்டிதான், பயமில்லை. ஆனாலும் ரிசல்ட் வந்த பிறகுதான் எதையும் உறுதியாகச் சொல்லமுடியும் என்றார்கள். ரிசல்டில், "ஒரு தீங்கும் இல்லை, புற்றுநோய் இல்லை" என்று வந்தது. டாக்டர்களே நம்ப முடியாத அற்புதமாய் அது இருந்தது. அற்புதம் செய்த தேவனுக்கே கோடானகோடி ஸ்தோத்திரம். ஜெபித்த அனைத்து ஜெப வீரர்களுக்கும் மிக்க நன்றி.

"*... நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப் பண்ணேன்; நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்...*" (யாத்திராகமம் 15:26). ஆமென்.

ஏ. கலா,
அயனாவரம்.

## சபையின் செய்திகள்

2012, மார்ச் திங்கள் 6 ஆம் நாள், காலை 9.30 மணி அளவில், அப்போஸ்தல தலைமைச் சபையின் பெண் ஊழியர்களும், தலைமைச் சபையின் ஐக்கியத்தில் அமைந்த ஏனைய சபைப்போதகமார்களின் துணைவியரும் தலைமைச் சபை வளாகத்தில் இணைந்து கூடினர்.

போதகர் தாமஸ்ராஜ் அவர்களின் துதி ஆராதனைக்குப் பின்னர், தலைமைப்போதகர் எம்.கே. சாம் சுந்தரம் அவர்கள், அப்போஸ்தலர் 12:12 ஐ மையமாகக்கொண்டு, "யோவான், மாற்குவின் தாயாகிய மரியாளின் குணநலன்கள்" என்றுள்ள தலைப்பில் மூன்று குறிப்புகளைப் பேசினார்.

அவள் கர்த்தருடைய பிள்ளைகளை வரவேற்று உபசரிக்கின்ற பெண் (அப்போஸ்தலர் 12:12), இடைவிடாமல் ஜெபிக்கின்ற பெண் (அப்போஸ்தலர் 12:12), உற்சாகப்படுத்தி தைரியமூட்டும் பெண் என்று போதித்தார்.

பின்னர், போதகர் தாமஸ்ராஜ் அவர்கள், ஆதியாகமம் 24:60 ஐ மையமாகக்கொண்டு, "ரெபெக்காள் கர்த்தரால் ஈசாக்குக்கு நியமிக்கப் பட்டவள்" என்றுள்ள தலைப்பில் நான்கு குறிப்புகளைப் பேசினார்.

ரெபெக்காள் தேவனுடைய செயலுக்குத் தன்னை ஒப்புவித்தவள் (ஆதியாகமம் 24:15), மற்றவர்களைக் கனம்பண்ண அறிந்தவள் (ஆதியாகமம் 24:18), தேவனுடைய ஆலோசனை நிறைவேற ஒத்தாசையாக இருந்தவள் (ஆதியாகமம் 20:26), மனரம்மிய மாக வாழ அறிந்தவள் (ஆதியாகமம் 24:25) என்று எடுத்துரைத்தார்.

ஊழியர்களின் அர்ப்பணிப்பு ஜெபத்திற்குப் பின்னர், மதிய உணவு வழங்கப்பட்டு, கூட்டம் நலமுடன் முடிந்தது.

## NEWS

### கறுப்புப் பணத்தை மீட்க மத்திய அரசு அதிரடி

சட்டவிரோதமாக வெளிநாடுகளில் முதலீடு செய்யப்பட்டுள்ள கறுப்புப் பணத்தை மீட்பதற்காக அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட 8 நாடுகளில் வருமானவரி அலுவலகங்கள் அமைக்கப்படும் என, மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு வங்கிகளில் இந்தியர்கள் பல லட்சம் கோடியைச் சட்டவிரோதமாக முதலீடு செய்துள்ளதாகவும் அதை மீட்க வேண்டும் என்றும் எதிர்க்கட்சிகள் கோரி வருகின்றன. இதற்காக மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

இதன் ஒரு பகுதியாக, அடுத்த நிதியாண்டில் அமெரிக்கா, இங்கிலாந்து, நெதர்லாந்து, சைப்ரஸ், ஜெர்மனி, பிரான்ஸ், ஜப்பான் மற்றும் ஐக்கிய அரபுநாடுகள் ஆகிய 8 நாடுகளில் வருமானவரி அலுவலகம் நிறுவப்படும் என, நிதியமைச்சர் பிரணாப் முகர்ஜி தமது பட்ஜெட் உரையில் தெரிவித் துள்ளார்.

இதற்காக அடுத்த நிதியாண்டில் ரூ.2.41 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது வரும் ஆண்டுகளில் ரூ.18.2 கோடியாக அதிகரிக்கப் படும். இந்த அலுவலகங்களுக்காக, வரி ஏய்ப்புத் தொடர்பான விஷயங்களில் அனுபவம் வாய்ந்த உயர் அதிகாரிகளை மத்திய நேரடி வரிகள் வாரியம் நியமிக்கும். இந்த அலுவலகங்கள் வெளியுறவு அமைச்சகத்துடன் இணைந்து, வெளிநாடுகளில் பதுக்கப்பட்டுள்ள கறுப்புப் பணத்தை மீட்பதற்கான நடவடிக் கையில் ஈடுபடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(தினகரன் 19-03-2012)

# இயேசு
## வாய்திறவாதிருந்தார்

இயேசு தனியாக நின்ற அந்நாளில்
மனிதரின் இருதயம் கல்போன்றிருப்பதை உணர்ந்து,
தாம் பாவப்பரிகாரஞ்செய்ய வந்ததை அறிந்து —
அன்று "அவர் வாய்திறவாதிருந்தார்."

அவர்கள் அவர் வார்த்தையை மாற்றி,
பொய்ச்சாட்சி கூறினர்,
கடினமான கயிற்றினால் அவரைக் கட்டினர்,
பரிகசிக்குமாறு அவரை ஆண்டவர் என்றழைத்தனர்;
"ஆனால் இயேசு வாய்திறவாதிருந்தார்."

அவர்கள் அவர் முகத்தில் துப்பினர்,
ஒரு இடத்தினின்று மறு இடத்திற்கு இழுத்துச் சென்றனர்,
அவர்மேல் எல்லா அவமானத்தையும் குவித்தனர்;
"ஆனால் இயேசு வாய்திறவாதிருந்தார்."

என் நண்பனே, அவற்றை ஒப்பிடும்போது,
எண்ணிக்கைக்கு மிகக் குறைவான அவமரியாதைகளால் மனங்கசந்து,
நீ "நீதி" என்றழைக்கும் கடுங்கோபத்துடன்
மிகவும் ஆத்திரமடைவதென்ன?
உன் மீட்பர் "வாய்திறவாதிருந்தார்."

Reg.Number TN/CCN/385/2012-2014, Licence to the post under WPP No.TN/CCN/85/2012-2014
Reg. Under Regis. of News Paper for India No.1295/57, Posting date 29th & 30th of every month.
Date of Publication: Monthly, 15th of every month.
Posted at RMS/1 Patrika Channel, Egmore, Chennai - 600 008.

## ஏ.சி.ஏ. இலக்கிய ஊழியத்தின்மூலமாக இதுவரையில் வெளியிடப்பட்டுள்ள MP3 சி.டி.க்களின் பட்டியல்

| எண். | பெயர் | விலை |
|---|---|---|
| 1. | உன்னதப்பாட்டு (வேதபாடம்) | ₹ 150/- |
| 2. | வெளிப்படுத்தின விசேஷம் (வேத பாடம்) | ₹ 150/- |
| 3. | வாக்குத்தத்தச் செய்திகள் 2005 | ₹ 40/- |
| 4. | வாக்குத்தத்தச் செய்திகள் 2006 | ₹ 40/- |
| 5. | வாக்குத்தத்தச் செய்திகள் 2007 | ₹ 40/- |
| 6. | வாக்குத்தத்தச் செய்திகள் 2008 | ₹ 40/- |
| 7. | வாக்குத்தத்தச் செய்திகள் 2009 | ₹ 40/- |
| 8. | ஏழு ஆவிக்குரிய கதாபாத்திரங்கள் | ₹ 40/- |
| 9. | புது வருட செய்திகள் 2004-2010 | ₹ 40/- |
| 10. | ஆவிக்குரிய பாடல்களும் செய்திகளும் | ₹ 40/- |
| 11. | யாக்கோபின் ஆசீர்வாதங்கள் | ₹ 40/- |
| 12. | பரிசுத்தவான்களின் நடக்கையும், ஆசீர்வாதமும் | ₹ 40/- |
| 13. | இயேசு | ₹ 40/- |
| 14. | பக்திவிருத்திக்கான செய்திகள் | ₹ 40/- |
| 15. | மிருகங்களோடு ஒப்பிடப்பட்டுள்ள கிறிஸ்தவ வாழ்க்கை | ₹ 40/- |
| 16. | இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாவோம் | ₹ 40/- |
| 17. | ஊழியர்களுக்கு (8 பகுதிகள்) பகுதி ஒன்றின் விலை | ₹ 40/- |
| 18. | இயேசுவின் வருகையைக்குறித்த செய்திகள் | ₹ 40/- |
| 19. | கர்த்தரின் திருப்பந்தி | ₹ 40/- |
| 20. | சகோதரிகளுக்கு (2 பகுதிகள்) பகுதி ஒன்றின் விலை | ₹ 40/- |
| 21. | வாலிபர்களுக்கு (2 பகுதிகள்) பகுதி ஒன்றின் விலை | ₹ 40/- |
| 22. | விசுவாசிகளின் ஜெப வாழ்க்கை (2 பகுதிகள்) பகுதி ஒன்றின் விலை | ₹ 40/- |
| 23. | கர்த்தருடைய பரிசுத்தவான்கள் (2 பகுதிகள்) பகுதி ஒன்றின் விலை | ₹ 40/- |
| 24. | மெய்யான போஜனம் | ₹ 40/- |
| 25. | நம்பிக்கையின் ஆசீர்வாதங்கள் | ₹ 40/- |
| 26. | பரிசுத்தத்தைக்குறித்த செய்திகள் (2 பகுதிகள்) பகுதி ஒன்றின் விலை | ₹ 40/- |
| 27. | பெந்தெகொஸ்தின் செய்திகள் | ₹ 40/- |
| 28. | ஆறுதலின் செய்திகள் (2 பகுதிகள்) பகுதி ஒன்றின் விலை | ₹ 40/- |
| 29. | நம்மைக்குறித்து தேவனுக்குக் கணக்கொப்புவிக்கவேண்டும் | ₹ 40/- |
| 30. | பரிசுத்தம் (வேத பாடம்) | ₹ 40/- |
| 31. | ஆனந்த ஆராதனை (3 பகுதிகள்) பகுதி ஒன்றின் விலை | ₹ 40/- |
| 32. | நம்பிக்கையின் பாடல்கள் | ₹ 40/- |
| 33. | கிறிஸ்தவக் குடும்பம் | ₹ 40/- |
| 34. | சிலுவையைக் குறித்தச் செய்திகள் | ₹ 40/- |
| 35. | Golden Classical Hits (Songs) | ₹ 40/- |
| 36. | தாவீது தேவனுடைய மனிதன் | ₹ 40/- |
| 37. | தேவன் தமது பிள்ளைகளுக்கு அருளும் ஆசீர்வாதங்கள் | ₹ 40/- |
| 38. | அப்போஸ்தலனாகிய பவுல் | ₹ 40/- |
| 39. | பரிசுத்தவான்களின் ஜெபம் | ₹ 40/- |
| 40. | இயேசுவின் நற்பண்புகள் | ₹ 40/- |
| 41. | வாக்குத்தத்தச் செய்திகள் 2002 | ₹ 40/- |
| 42. | எஸ்தர் (வேத பாடம்) | ₹ 40/- |
| 43. | இயேசுவின் பிறப்பு | ₹ 40/- |
| 44. | கிறிஸ்துமசின் ஆசீர்வாதங்கள் | ₹ 40/- |
| 45. | வாக்குத்தத்தச் செய்திகள் 2010 | ₹ 40/- |
| 46. | நெகேமியா (வேதபாடம்) | |
| 47. | வெற்றியின் செய்திகள் | ₹ 40/- |
| 48. | இயேசுவின் சீஷர்களிடமிருந்து கற்றுக்கொள்ளும் பாடங்கள் | ₹ 40/- |
| 49. | இயேசுவின் வார்த்தைகளினாலுண்டாகும் ஆசீர்வாதங்கள் | ₹ 40/- |
| 50. | குருத்தோலை ஞாயிறு செய்திகள் | |
| 51. | புனித வெள்ளி செய்திகள் | |
| 52. | உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் செய்திகள் | |
| | **(இம்மூன்று சி.டி.க்களின் தொகுப்பு** | **₹ 100/-)** |
| 53. | தேவ பெலன் | ₹ 40/- |
| 54. | புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் | ₹ 40/- |
| 55. | ஆசீர்வதிக்கப்பட்ட கிறிஸ்தவ வாழ்க்கை | ₹ 40/- |
| 56. | கர்த்தர் உங்கள் கைகளின் கிரியைகளை ஆசீர்வதிப்பார் | ₹ 40/- |
| 57. | கர்த்தருக்குப் பரிசுத்தம் | ₹ 40/- |
| 58. | கிறிஸ்துமஸ் செய்திகள் | ₹ 40/- |
| 59. | கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை நோக்கிப் பாருங்கள் | ₹ 40/- |

வேண்டுவோர் விரும்பும் சி.டி.க்களை எழுதிப் பெற்றுக்கொள்ளலாம். தபால் செலவு தனி.

24 Hrs. Prayer Line 26625815

**Herald of Deliverance**
Edited and published by Pastor.M.K.Sam Sundaram on behalf of ACA Literature Ministry
111, Brick kiln Road, Purasawalkam, Chennai -600007.
Phone: 26622775 Website: www.acalivechurch.org
Administrative office: ACA Literature Ministry, Post Box No.3504, Chennai -600007
Phone: 26622021 e-mail: acalm@acalivechurch.org
Printed by Devadas, Lord Printers, 71/A Gangaiamman Koil Street, Vadapalani, Chennai -600 026. Phone: 24728885/Cell 9841429079